24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 215 ஆனி 17 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 02 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## போதைப் பொருள்களை விற்று ஆயுதம் வாங்கினராம் புலிகள்

### புதுப் புரளியைக் கிளப்புகிறார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 2

போதைப்பொருள் விற்பனைதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் வருமானமாக இருந்தது. உலகத்திலுள்ள போதைப்பொருள் வர்த்தகர்களுடன் பிரபாகரனுக்குத் தொடர்பு இருந்தது. போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலம்தான் பிரபாகரன் ஆயுதங்களை வாங்கிப் போர் நடத்தினார். 19



## ஹேமசிறி, பூஜிதவை கைதுசெய்ய உத்தரவு

கொழும்பு, ஜூலை 2

உயிர்த்த ஞாயிறு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில், முன்னரே தகவல்கள் அறிந்தும் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காமைக்காகப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் ஹேமசிறி 19

## தூக்குக்கு எதிராக நேற்று மட்டும் 12 மனுக்கள்

கொழும்பு, ஜூலை 2

தூக்குத் தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை ஒரே நாளில் 19

### கீரிமலை நகுலேஸ்வரத்தில்

## ஆடம்பர மாளிகையுடன் 62 ஏக்கரை கையகப்படுத்த அவசர ஏற்பாடுகள்

### நாளைமறுதினம் காணி அளவீடு என நில அளவைத் திணைக்களம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

கீரிமலை, நகுலேஸ்வரத்தில் உள்ள அரச தலைவர் மாளிகையுடன் இணைத்து 62 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் நாளைமறுதினம் ஆரம்பிக்கப்படவுள்ளன. அன்றைய தினம் 19

## மாலைதீவு பறந்தார் மகிந்த

கொழும்பு, ஜூலை 2

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச மாலைதீவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

கொழும்பிலிருந்து நேற்றுப் பிற்பகல் புறப்பட்ட அவர் மூன்று நாள்கள் மாலைதீவில் தங்கியிருப்பார்.

அவர் அங்கு தங்கியிருக்கும் நாள் 19

## வரலாறு தெரியாத உளறல்!

கொழும்பு, ஜூன் 2

போதைப்பொருள் வர்த்தகம் நடத்தியே பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டம் நடந்தப்பட்டது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சொல்லியிருப்பது ஒட்டுமொத்த தமிழர் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தும் செயல். இதனை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். வரலாறு தெரியாமல் உளறுதல் சரியல்ல. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற தேசிய போதைப்பொருள் ஒழிப்பு மாநாட்டில் உரையாற்றிய அரச தலைவர் மைத்திரி, பிரபாகரன் 19

## ராசிக்கை கைது செய்யுமாறு முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 2

சிலோன் தௌஹீத் ஜமாத்தின் செயலர் அப்துல் ராசிக்கைக் கைது செய்ய வேண்டும் என்று பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சேவைகள் அமைப்பின் தலைவர் ரிசான் மஹ்ரூப் என்பவர் 19

## அரச தலைவர் தேர்தலை தாமதப்படுத்த முயற்சி!

### குற்றஞ்சாட்டுகின்றது பெரமுன

கொழும்பு, ஜூலை 2

அரச தலைவர் தேர்தலை தாமதப்படுத்தும் நோக்கத்துடன் மாகாண சபை தேர்தலை நடத்த அரசு முயற்சிக்கிறது என சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி (பெரமுன) குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது நாட்டில் ஆட்சி மாற்றத்தை கொண்டுவரும் தேர்தலுக்கே அவசியம் உள்ளது. அடுத்த சில வாரங்களுக்குள் மாகாண சபை தேர்தலை நடத்த அரசு முயற்சிக்கிறது. இந்த நடவடிக்கைக்கு கூட்டு எதிர்க்கட்சி 19



## நயினை நாகபூஷணிக்கு கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நயினாதீவு சிறி நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும், 15 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 19

## மைத்திரிபால அழுங்குப் பிடி: ரணிலுடன் தூதுவர்கள் பேச்சு

கொழும்பு, ஜூன் 2

இலங்கையில் தூக்குத் தண்டனை மீண்டும் நிறைவேற்றப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ள நிலையில் வெளிநாடுகளின் தூதுவர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு நேற்று நடந்துள்ளது. இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட வெளிநாட்டுத் தூதுவர்கள் அரச தலைவர் எடுத்துள்ள முடிவு தொடர்பாகக் கவலை வெளியிட்டனர் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது டுவீற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையில் பாலியல் வன்கொடுமை, போதைப் பொருள் 19

## டிசெம்பரில் ஆட்சி மாற்றம்

### அடித்துக் கூறுகின்றது கூட்டு எதிரணி

கொழும்பு, ஜூலை 2

இலங்கையில் அடுத்த அரச தலைவர் தேர்தல் இடம்பெற்ற மறுநாளே, புதிய தலைமை அமைச்சரையும், புதிய அமைச்சரவையும் நியமித்து சக்தி மிக்கதொரு அரசை உருவாக்குவோம்.

இவ்வாறு கூட்டு எதிரணி நாடாளும்மன்ற உறுப்பினரான எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர்வரும் நவம்பர் 23 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் அரச தலைவர் நடத்த வேண்டும். அந்தத் தேர்தல் ஊடாக சக்தி மிக்கதொரு அரச தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

அதற்கு அடுத்த நாளே நாம் புதிய தலைமை அமைச்சருடனும், புதிய அமைச்சரவையுடனும் சக்தி மிக்கதொரு அரசை உருவாக்குவோம், டிசெம்பர் மாதத் 19

## மைத்திரி பற்றிய கருத்தை கணக்கெடுக்க மாட்டோம்

### வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவே போட்டியிடுவார் என்று அந்தக் கட்சியின் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பில் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்றுக் கொழும்பில் 19





# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2020 - 2023

தை மாதம் 10ஆம் திகதி ஜனவரி 24, 2020ஆம் ஆண்டு சனிபகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு நகர்கிறார். இந்த சனிப்பெயர்ச்சியால் தனுசு மகரம் கும்பம் ராசிக்காரர்களுக்கு ஏழரைச் சனி காலமாகும். விருச்சிக ராசிக்காரர்கள் ஏழரைச் சனியில் இருந்து விடுபடுகிறீர்கள்.




சனிபகவான் உங்கள் ராசிக்கு 12 ஆம் அதிபதி. ராசி அதிபதியுமாவார். ஏழரையோ, அஷ்டமத்து சனியோ, கண்டச்சனியோ எதுவாக இருந்தாலும் நன்மையே செய்வார் எனவே கவலைப்படாமல் இந்த ஏழரை சனி பகவானை கடந்து விடலாம். கும்ப ராசிக்கு ஏழரை ஆரம்பிக்குதே என்று அஞ்ச வேண்டாம் இந்த ஏழரை ஆண்டு காலம் ஏற்றங்கள் நிறைந்த ஆண்டாக அமையப்போகிறது.

கும்பம் ராசிக்காரர்களுக்கு ஜாதகப்படி கிரகங்களின் சஞ்சாரம்,நல்ல நிலையில் இருந்தாலோ, தசாபுத்தி நன்றாக இருந்தாலோ எந்த பாதிப்பும் வராது. இந்த சனிப்பெயர்ச்சி காலத்தில் கல்வி, வேலைவாய்ப்பு, தொழில், குடும்பத்தில் சந்தோசம், நிம்மதி எப்படி இருக்கும் என்று பார்க்கலாம்.

கும்பம் ராசிக்காரர்களுக்கு ஜாதகப்படி கிரகங்களின் சஞ்சாரம் நல்ல நிலையில் இருந்தாலோ, தசாபுத்தி நன்றாக இருந்தாலோ எந்த பாதிப்பும் வராது. இந்த சனிப்பெயர்ச்சி காலத்தில் கல்வி, வேலைவாய்ப்பு, தொழில், குடும்பத்தில் சந்தோசம், நிம்மதி எப்படி இருக்கும் என்று பார்க்கலாம்.

**விட்டுக்கொடுங்கள்**

சனி பகவான் 12இல் அமர்வதால் பணம் விரையங்கள் மருத்துவ செலவாக ஏற்படும் எனவே இதை தடுக்க சுப செலவாக மாற்றுங்கள். நோயாளிகளுக்கு உதவி செய்யலாம். அவர் மகரத்தில் அமர்ந்து உங்களின் தனம், குடும்ப வாக்கு ஸ்தானமான இரண்டாவது ஸ்தானத்தை பார்க்கிறார் சனி. வாயினால் வம்பு வழக்குகள் வரலாம். நாவடக்கம் தேவை. எதை பேசினாலும் பிரச்சினை வரலாம் என்பதால் வாயை மூடி பேசவும். ஈகோவை விட்டுக்கொடுங்க. குடும்ப ஸ்தானத்தை சனி பார்ப்பதால் பிரச்சினைகள் வராமல் இருக்க விட்டுக் கொடுங்க. விட்டுக்கொடுப்பவர்கள் கெட்டுப்போவதில்லை.

**கடன் கிடைக்கும் நோயும் வரும்**

ராசிக்கு 6வது ஸ்தானத்தை சனி பகவான் பார்க்கிறார். கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும். செலவு செய்ய நோய் நொடிகள் எட்டிப்பார்க்கும். மருத்துவ ஆலோசனைகளை பெறலாம். எதிரிகளால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படும். எதிர்பார்த்த விரும்பிய நல்ல சம்பளத்தில் வேலை கிடைக்கும். கடன்பட்டு பொருட்கள் வாங்க வேண்டிய நிலை வரும். வேலையில் ஊதிய உயர்வு கிட்டும். பதவி உயர்வு ஒரு சிலருக்கு அமையும்.

**ஆலய தரிசனம் நன்மை**

பாக்கிய ஸ்தானத்தை பார்ப்பதால் தந்தைக்கு நன்மை ஏற்படும். வேலை நிமித்தமாக ஒரு சிலர் வெளிநாடு செல்வர். பாஸ்போர்ட், விசா இவற்றில் இருந்த தடைகள் நிவர்த்தியாகும். வெளிநாட்டு பயணங்கள் நன்றாக அமையும். பலருக்கு வெளிநாடுகளில் வேலை கிடைக்கும் யோகம் கிடைக்கும். அடிக்கடி ஆலய தரிசனம், தெய்வ தரிசனம் செய்ய சந்தர்ப்பமும், சூழ்நிலையும் அமையும்.



**கல்வியில் கவனம்**

மாணவர்கள் படிப்பில் அதிகக் கவனம் செலுத்துதல் வேண்டும். அடிக்கடி மறதி மற்றும் ஞாபகசக்தி குறைந்து காணப்படும். எனவே தேவையற்ற விஷயங்களில் கவனத்தைத் திசை திருப்பாமல் படிப்பில் கண்ணும் கருத்துமாய் இருங்க. கல்விக் கடன்கள் எளிதாக கிடைக்கும். தவறு செய்தால் மட்டுமே தண்டிப்பார். தலையில்குட்டிஉங்கள்தவறைச் சுட்டிக்காட்டுவார். வம்பு வழக்குகளில் இருந்து ஒதுங்கி இருங்கள்.

# கடக ராசிக்காரர்களின் குணநலன்கள்





கடக ராசிக்காரர்கள் பொதுநலமிக்கவர்கள். உலகை ஆட்சி செய்த பலரும் கடக ராசிக்காரர்களாகத்தான் இருப்பார்கள். எல்லோரும் நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்கள். அதற்குக் காரணம் இந்த ராசியின் அதிபதி சந்திரன். சந்திரன் மாத்ருகாரகன். ஜோதிட சாஸ்திரத்தில் சூரியன் தந்தை என்றால் சந்திரன் தாயார் ஸ்தானத்தைக் குறிக்கும். தாயைப்போல மற்றவர்கள் மீது அன்பு பாராட்டி மற்றவர்களின் நன்மைக்காகப் பாடு படுவார்கள்.

தனக்கென சிறிதும் வைத்துக்கொள்ளாமல், தன் குடும்பத்துக்காகவோ, தன் உறவுகளுக்காகவோ, தனது தெருவுக்காகவோ தனது ஊருக்காகவோ அனைத்தையும் தியாகம் செய்பவர்கள். ரிஷப ராசிக்காரர்களைப்போலவே கடக ராசிக்காரர்களும் தாயின் மீது மிகுந்த அன்புள்ளவர்களாக இருப்பார்கள். இவர்கள் எதைச் செய்தாலும் தாயை முன்னிலைப்படுத்தியே செய்வார்கள். தாய் சொல்லைத் தட்டாதவர்கள்.

கடக ராசி ஜல ராசி என்பதால் ஆறு, கடல் போன்ற நீர்நிலைகளில் விளையும் பொருள்களைக் கொண்ட தொழில்கள் இவர்களுக்கு நல்ல லாபாம் கிடைக்கும். கடக ராசிக்கு திரவப் பொருள் சம்பந்தப்பட்ட பால் வியாபாரம், டீக்கடை வியாபாரம், ஹோட்டல் தொழில்கள் இவர்களுக்குக் கை கொடுக்கும்.



# இசைப் பயணத்தை தொடங்கிய ஏ.ஆர்.ரஹ்மானின் மகன்

பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் மகனான ஏ.ஆர்.அமீன், தனது இசை பயணத்தை சுயாதீன பாடல் மூலம் தொடங்கியுள்ளார்.
இசைப் புயல் ஏ.ஆர்.ரஹ்மானின் மகனான ஏ.ஆர். அமீன், தமிழில் அவரது முதல் சுயாதீன பாடலான சகோவை வெளியிட்டுள்ளார். காதல் பற்றியும் நட்பைப் பற்றியும் பேசும் இந்தப் பாடலுக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். இந்தப் பாடலை விவேக் மற்றும் ஏ.டி.கே இணைந்து எழுதியுள்ளனர்.
இந்தப் பாடலை ஏ.ஆர்.ரஹ்மான் மற்றும் ஏ.ஆர்.அமீன் தயாரித்துள்ளனர். இந்தப் பாடலின் முழு காணொலியை இயக்கி இருப்பது அமித் கிருஷ்ணன். இந்தக் காணொலியில் அமீன் பாடுவது அனைவரின் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் விதமாக அமைந்திருக்கிறது.
இந்தப் பாடலைப் பற்றி ஏ.ஆர்.ரஹ்மான் கூறுகையில், "அமீனின் இந்த முதல் பாடல் நிச்சயம் அவருக்குச் சிறந்த பாடகர் எனும் அங்கீகாரத்தைப் பெற்றுத் தரும். மேலும் இனிவரும் அவரின் படைப்புகளும் ரசிகர்களிடையே பெரிய எதிர்பார்ப்பினை உண்டாக்கும்" என கூறினார்.

## வாழ்க்கை பொன்மொழிகள்

நாம் படிக்கப் படிக்க நம்மிடமிருக்கும் அறியாமையை அறிந்து கொள்கிறோம்.

**– ஷெல்லி.**

ஒரு குழந்தை கனவானாகவோ, சீமாட்டியாகவோ இருக்கும்படி செய்வது கல்வியல்ல. நல்ல மனிதனாக இருக்கச் செய்வதே கல்வி.

**– ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்.**

சீருடன் கச்சிதமாகவும் கண்ணியமாகவும் இருப்பதற்கு பணம் அதிகம் தேவைப்படாது.

**– மகாத்மா காந்தி.**

கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்.

**– அரிஸ்டாட்டில்.**

நம்பிக்கை எண்ணற்ற எதிரிகளையும் வென்று விடும்.

**– லாங்ஃபெல்லோ.**

ஆற்றலைவிட ஆர்வமே வெற்றிக்கு அடிப்படைக் காரணமாகும்.

**– சார்லஸ் பக்ஸ்டன்.**

வாழ்க்கையை வளமாக்க விரும்பினால் காலத்தை வீணாக்காதே. காலத்தால் செய்யப்பட்டதே வாழ்க்கை.

**– ரிச்சர்ட் சாண்டர்ஸ்**

## twitter

Devendran Palanichamy

இந்திய அணியின் ஜெர்சி காவியா இருக்குன்றத விட பெரிய பிரச்சனை... கன்றாவியா இருக்குன்றது தான்...

உள்ளூராட்டக்காரன்

துணிக்கடையில், நமக்கு பிடித்த டிசைன் உள்ள சட்டையில் நமக்கான சைஸ் இல்லாமல் போவது நமக்கான டிசைன்

செங்காந்தள்@kumarfaculty

வெளியில் செல்லும்போது மொபைல் பேட்டரி 100% இருந்தால் அதுவும் நல்ல சகுனமாக எடுத்துக்கொள்ளப்படும்...!!!

ச ப் பா ணி@manipmp

பெரும்பாலான சிறு தொழில்களுக்கு அடகு வைத்த நகைகள் தான் "முதல் உதவி.!

தமிழினி@Tamil_Zhinii

சென்னையாய் நான்
மழையாய் அவன்
சில நேரம் தவிக்க விடுகிறான்
சில நேரம் தத்தளிக்க
விடுகிறான்....!













# யார் அழகி?



ஒரு முறை அப்துல் கலாம் பெண்கள் பள்ளி நிகழ்வொன்றில் கலந்து கொண்டார்..
நிகழ்வுமுடிந்ததும் வழக்கம் போல மாணவிகளோடு ஒரு கலந்துரையாடல் நடக்கிறது. அப்போது ஐஸ்வர்யா ராய் உலக அழ்கியாக தேர்வு செய்யப்பட்டிருந்த சமயம்..
"ஐஸ்வர்யா ராய் ஏன் உலக அழகியாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.?"
இந்தக் கேள்வியை மாணவிகளிடையே கேட்கிறார்..
ஒரு மாணவி "அங்கு வந்திருந்தவர்களில் அவர்தான் அழகாக இருந்தார்" என்கிறாள். அவருக்குப் பதிலில் திருப்தி இல்லை..
அடுத்த மாணவி "அங்கே கேட்கப்பட்ட கேள்விக்கு அறிவுப் பூர்வமாக சிறப்பான ஒரு பதிலை சொன்னார்"..
அதிலும் அவருக்குச் சம்மதமில்லை..
இப்படியே போய்க் கொண்டு இருக்க, அரங்கமே புரிபடாத ஒரு அமைதியில் இருக்கிறது..
ஆசிரியர் உட்பட அத்தனை பேருக்கும் குழப்பமான குழப்பம். அந்த சிறுமி எழுகிறாள் "ஏனென்றால் அந்த அழகிப் போட்டியில் நான் கலந்து கொள்ளவில்லை, அதனால்தான்".. என்கிறாள்..
அரங்கமே சிரிப்பால் அதிர்கிறது. ஆனால் அங்கே ஒரே ஒரு கைதட்டல் ஓசை மட்டும் தனியாகக் கேட்கிறது..
அது கலாம் ஐயாவின் கைத்தட்டல்.
அவர் கூறினார்.
"குட்..! இதுதான் உண்மையான பதில்..
அடுத்தவர்கள் யார் எம் அழகை நிர்ணயம் செய்வதற்கு! அதற்கு முன் எம்மை நாமே அழகு என்று தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமல்லவா.?

**கனிவான அன்பும்**
**தளராத நம்பிக்கையும்**
**உயர்வான எண்ணமும் கொண்ட,**
**நாம் எல்லாருமே அழகுதானே?**
**அந்த நம்பிக்கை தானே அழகு!**

என்றார்.






# மன்னரும், சந்தன வியாபாரியும்!

மதுராபுரி நாட்டை, மன்னர் போஜராஜன் ஆண்டு வந்தார். அவர் நீதி தவறாதவர். குடிமக்கள் நலனைப் பற்றியே, இரவு, பகலும் சிந்திப்பார். நலத்திட்டங்களை வகுத்து மக்கள் சுபீட்சமாய் வாழச்செய்தார்.

வாரம் ஒருமுறை, நாட்டை வலம் வருவார். மக்களிடம் குறைகளைக்கேட்டு, தீர்த்து வைப்பார். அப்போது, பார்ப்பவர்களை எல்லாம் நலமுடன் வாழ வேண்டும் என, மனதில் வேண்டிக்கொள்வார்.

கடைவீதியில், ஒரு சந்தன வியாபாரியைப் பார்க்கும்போது மட்டும் மனதில் வெறுப்பு ஏற்படும். அவனை, 'கொல்ல வேண்டும்' என்ற எண்ணம் வரும்.

ஒருநாள் நாட்டுவலம் முடிந்து திரும்பியதும் மந்திரி மதிவாணரிடம், "ஒவ்வொரு குடிமகனையும் பார்க்கும்போது, வாழ்த்த எண்ணுகிறேன். ஆனால், சந்தன வியாபாரியை மட்டும் கொல்லத் தோன்றுகிறது" என்றார்.

உரிய காரணத்தை அறிந்து சொல்வதாக, உறுதி சொன்னார் மந்திரி.




மறுநாள், மாறு வேடத்தில் சந்தன வியாபாரி கடைக்குச் சென்றார், மந்திரி. ஒரு சந்தனக்கட்டையை விலை பேசி வாங்கினார். பின், "வியாபாரம் நன்கு நடக்கிறதா? போதுமான இலாபம் கிடைக்கிறதா" என, விசாரித்தார்.

"சந்தனக்கட்டை விலை அதிகம் என்பதால், வியாபாரம் அவ்வளவாக இல்லை. வருமானம் மிக குறைவு. மன்னரின் தந்தை இறந்த போது, ஒரு கட்டு சந்தனக்கட்டை வாங்கினர். ஆயிரம் பொற்காசுகள் கிடைத்தன. இனி, மன்னர் இறந்தால் தான், நிறைய பொற்காசுகள் கிடைக்கும்" என்று, பெருமூச்சு விட்டான், வியாபாரி.

அவன் எண்ணத்தை புரிந்து அரண்மனைக்குதிரும்பினார் மந்திரி. மறுநாள், மந்திரியாக, சந்தன வியாபாரியை சந்தித்தார் மந்திரி. அவனுக்கு, ஆயிரம் பொற்காசுகள் கொடுத்து, "மன்னர் உனக்கு வழங்கியுள்ள பரிசு" என, கூறினார்.


மிகவும் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்ட வியாபாரி, "மன்னர், நூறாண்டுகள் நலமுடன் வாழ வேண்டும்" என, வாழ்த்தினான்.

அடுத்த வாரம் மன்னர், நாட்டுவலம் சென்றார். சந்தன வியாபாரியைக் கண்டார். அவனைக் கொல்லத் தோன்றவில்லை. மாறாக, வாழ்த்த தோன்றியது.

அரண்மனை திரும்பிய மன்னர், மந்திரியை சந்தித்தார். வியாபாரி மீதிருந்த எண்ணம் மாறியுள்ளதை சொன்னார். மகிழ்ச்சியடைந்த மந்திரி, வியாபாரியை சந்தித்து, பொற்காசுகள் கொடுத்த விவரத்தைத் தெரிவித்தார்.

மன்னர் போஜராஜன், அந்த அனுபவத்தை, மக்கள் மனதை புரியும் பாடமாக, கற்றுக் கொண்டார்.

## வழிகாட்டுவோம்



## பழமொழிகள்

- ஆனை கறுத்தால் ஆயிரம் பொன்.
- இரண்டு ஓடத்தில் கால் வைக்காதே.
- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- அகல இருந்தால் நிகள உறவு. கிட்டவந்தால் முட்டப் பகை.
- அகல உழுகிறதை விட ஆழ உழு.
- அசைந்து தின்கிறது யானை, அசையாமல் தின்கிறது வீடு.
- அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
- இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
- உடல் உள்ள வரையில் கடல்கொள்ளாத கவலை.
- இளங்கன்று பயமறியாது
- விருப்பத்தினால் ஆகாதது வீம்பினால் ஆகுமா?
- விரலுக்குத் தக்கதே வீக்கம்.
- வாழ்கிறதும் கெடுகிறதும் வாயினால்தான்.
- ஆடிக் காற்றுக்கு அம்மியும் பறக்கும்.



## மியாவ் மியாவ் பூனைக்குட்டி

மியாவ் மியாவ் பூனைக்குட்டி
மீசை வச்ச பூனைக்குட்டி
பையப் பையப் பதுங்கி வந்து
பாலைக் குடிக்கும் பூனைக்குட்டி

பளபளக்கும் பளிங்குக் குண்டு
பளிச் சென்று முகத்தில் இரண்டு
வெளிச்சம் போடும் விழி கண்டு
விரைந்தோடும் எலியும் மிரண்டு

விரித்த பூவைக் கவிழ்த்ததுபோல
விளங்கும் பூனைக் காலடிகள்
இருந்து தவ்வ ஏற்றபடி
இயங்கும் சவ்வுத் தசைப்பிடிகள்

அழகு வண்ணக் கம்பளி யால்
ஆடை உடுத்தி வந்தது போல்
வளர்ந்து முடியும் பலநிறத்தில்
வந்து தாவும் பூனைக்குட்டி

விரட்டி விலங்கினைக் காட்டிலே
வீரங் காட்டும் புலியினமே
துரத்தி எலியை வீட்டினிலே
தொல்லை தீர்க்கும் பூனை தினமே

## அகராதி

- அகரமுதலி அல்லது அகராதி என்பது அகரவரிசைப்படி அட்டவணைப் படுத்தப்பட்ட ஒரு மொழியின் சொற்களையும், அவற்றுக்கான பொருளையும், சில சமயங்களில் அச் சொற்கள் தொடர்பான வேறுபல விவரங்களையும் கொண்டுள்ள நூலைக் குறிக்கும்.
- தமிழ்ச் சொற்களுக்கான பொருள் மற்றும் விவரங்களைத் தரும் நூல் தமிழ் அகராதி ஆகும்.
- அகராதி என்ற சொல் அகரம், ஆதி என்ற இரண்டு சொற்களின் சேர்க்கையாலானது. (அகரம் + ஆதி = அகராதி). அகராதி அகரமுதலி எனவும் வழங்கப்படும்.
- இதன் பெயர் குறிப்பிடுகின்றபடி, இந்த நூலிலே சொற்கள் அகர வரிசையில் அமைக்கப்பட்டிருக்கும்,
- ஒரே சொல்லில் தொடங்கும் சொற்கள், அவற்றில் இரண்டாவது எழுத்தைக் கொண்டு வரிசைப்படுத்தப்படும். இவ்வாறே சொல்லின் இறுதி எழுத்துவரை அகரவரிசை பின்பற்றப்படும்.
- தமிழில் அகராதிகள் தோன்றுவதற்குமுன் தமிழ்ச் சொற்களின் பொருள்களை அறிந்துகொள்வதற்குப் பயன்பட்டவை நிகண்டுகள் எனப்பட்ட நூல்களாகும்.



ப.பைஷ்ணவி,
தரம் 4ஏ,
யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

## இரு படங்களுக்கு இடையே 5 வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடிப்போம்



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 . 06 . 1934

மறைவு 12 . 07 . 2018

**திருமதி கதிரமலை ஞானம்மா**

உமைவருத்தி எமை வளர்த்தீர்
நாம் வளமுடன் வாழ வழி வகுத்தீர்
கணப் பொழுதில் கண்மூடி காதவழி சென்றதேனோ
எப்பொழுதும் உம் நினைவு எம் நெஞ்சில் நிறைந்திருக்கும்.

கண்ணகிநகர்,
புன்னை நீராவி.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 04.06.2019
செவ்வாய்க்கிழமை இறைபதம்
அடைந்த
எமது குடும்ப குலவிளக்கு

**கதிர்காமத்தம்பி சிவபுண்ணியம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (03.07.2019) புதன்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் எரிஞ்சி அம்மன் கோயில் அந்தியேட்டி மடத்தில் இடம் பெறவுள்ளது. 04.07.2019 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

**077 645 3435**

## வேலையாள் தேவை

எமது வியாபார நிறுவனத்திற்கு வாகனத்தில் சென்று வேலை செய்யக்கூடிய Deliver Boys மற்றும் கனரக வாகன சாரதியும் தேவை.
தொடர்புகளுக்கு நேரில் வரவும்
P.S.T & Sons (Pvt) Ltd.
191A, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

யாழ் கச்சேரியடியில் பூவரசங்குளம், வவுனியா எனும் முகவரியுடைய சின்னராசா சிவலோகேஸ்வரன் என்பவரின் தே.அ.அட்டை (570595326 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(CS 26402)(04.17)

**077 529 3445**

## தேவை

**J.C.B டிரைவர் மற்றும் பகுதிநேர வேலைக்கு ஆள்கள் தேவை.**

**077 221 5167**

## அறை வாடகைக்கு உண்டு

**நாள் வாடகை,
மாத வாடகைக்கு அறை
உண்டு.**

**077 221 5167**

## மணமகள் தேவை

வடமராட்சி, யாழ்.இந்து கௌரவ குடும்பம், 34 வயது, குற்றமற்ற, மகம் 3ஆம் பாதம், யாழ்.நகரில் பிரபல ஹொட்டலில் முகாமையாளராகப் பணிபுரிபவருக்கு 31 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.

**077 471 0814** (ANE/889)(11.17)

## பெயர்மாற்றம்

**பிறேமரத்தினம் சுகந்தினி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **பிறேமரத்தினம் சாந்தினி** என மாற்றம். செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சாந்தினி என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(AKN 748)(04.17)

**சாந்தினி.**

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**பாலேந்திரநாதன் சுபேஸ்**

தோற்றம்
21.06.1983

மறைவு
04.04.2019

கடந்த 04.04.2019 இறைபதமடைந்த எமது அன்புச் செல்வனின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியும் பல வழிகளில் உதவிகள் புரிந்தும் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் இருந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

அத்துடன் இன்று (02.07.2019) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி கிரியைகளிலும் தொடர்ந்து 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

கிளான், துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி கிருபைராணி மாணிக்கம் செல்லையா



தோற்றம் 28.02.1932

மறைவு 30.06.2019

மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருபைராணி மாணிக்கம் செல்லையா 30.06.2019 ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் இளைப்பாறுதல் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற P.M.செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, தம்பு, சின்னத்தம்பி, சின்னாச்சி மற்றும் சின்னமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளன் (ஓய்வுநிலை சிரேஷ்ட சாலைப் பரிசோதகர், CTB மன்னார்), தயாகரன் (RESC, வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்) தயாளினி, மேவின் தயாபரன் (லண்டன்), ஜெனிங்ஸ் (மாவட்ட இணைப்பாளர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு), றேமன், விக்ற்றர் தயாநிதி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை), சீலியா தயாநந்தினி - குரூஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகந்தி, யூலி ஆன் (ஆசிரியர், யா/ சன்மார்க்க வித்தியாலயம்), ஜொனிற்றா, நிரோஷா, தேவதாசன் குரூஸ் (HNB, பருத்தித்துறை), லதா ஆகியோரின் அன்பு மாமியாரும், அலன், பெனா, ஆனோல்ட், ஏஞ்சல், ஜெவ்றி, ஜோயல், ஜோர்ஜ், கேசியா, அன்றியா, இவோன், அடோறா, ஷீலோ ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (03.07.2019) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல.111, கண்டிவீதியிலுள்ள இலங்கை பெந்தேகொஸ்தே சபைச்சாலையில் இடம்பெற்ற பின்னர் பூதவுடல் வசந்தபுரம், மணியந்தோட்டத்திலுள்ள இலங்கை பெந்தேகொஸ்தே சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி வீதி,
மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

(CS/9352)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

**077 725 5543, 021 205 7872, 077 350 7842**

## கேள்வி அறிவித்தல்
### மூலோபாய திட்டங்கள் நிதி - 2019
### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை, வடக்கு மாகாணம்

01. தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சூரிய கல தொகுதி பொருத்துவதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.

02. தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

    01. கேள்விதாரர் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையில் (Sri Lanka Sustainable Energy Authority) Solar System வழங்குநராக பதிவு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.
    02. கேள்விதாரர் சூரிய கல தொகுதி சார்பாக பின்வரும் விடயங்களில் (design, Planning, Supplying, installing, testing, commissioning and maintenance) மேற்கொள்வதில் குறைந்தது 02 வருட அனுபவம் உடைய கம்பனியாக இருத்தல் வேண்டும்.
    03. வழங்குநர் முழு சூரியகல அமைப்பினையும் பராமரிக்க கூடிய உள்நாட்டு முகவரை கொண்டிருப்பதுடன் இரு வார காலத்தினுள் உதிரிப்பாகங்களை வழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
    04. இலங்கையில் சூரிய கல உற்பத்தி மற்றும் அது சார்ந்த உதிரிப்பாகங்கள் வழங்குதல் தொடர்பான திருப்திகர சேவைப்பதிவை கொண்டிருத்தல் வேண்டும்.

04. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037 , தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

05. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் 02.07.2019 ஆம் திகதியிலிருந்து 15.07.2019 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணி வரையும், 17.07.2019 ஆம் திகதி காலை 9.00 மணியிலிருந்து முற்பகல் 10.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு 17.07.2019ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

07. சமர்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

08. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணைவைப்பு (ரூபா) | செலலுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL /SDP/01/2019 | Supply, Installation, Commissioning and maintenance of 10kW Grid connected Solar PV System at pachchilaipalli Pradeshiya Sabha, Head Office. | 1.5 Mn | 15,000.00 | 02.10.2019 |

**சுப்பிரமணியம் சுரேன்
தவிசாளர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.**

## மரண அறிவித்தல்கள்



### கந்தையா வைபோகராஜா
**(வைலஜா ஸ்ரோர்ஸ்)**

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் ஆடியம்பிட்டி ஒழுங்கை, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா வைபோகராஜா (வைலஜா ஸ்ரோர்ஸ்) 30.06.2019 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆடியம்பிட்டி வீதி,**
**நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

**மண்ணில்** 15 . 07 . 1940



**விண்ணில்** 29 . 06 . 2019

### கிருஸ்ணபிள்ளை கந்தசாமி ஞானப்பிரகாசம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சில்லாலை பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஞானப்பிரகாசம் கடந்த (29.06.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகர் கிருஸ்ணபிள்ளை - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மிக்கேல்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பிலோமினாவின் அன்புக் கணவரும், வவி, ஜெயா, றாசன், றவி, கலா, லதா (ஜெய்சி), வசந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வள்ளிஅம்மாவின் சகோதரனும், மிக்கேல்பிள்ளை, விக்ரோரியா, ஆசிர்வாதம், மேரிப்பிள்ளை, நீக்கிலாப்பிள்ளை, மத்தேசுப்பிள்ளை, ஆபிரகாம், மரியபுஸ்பம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.07.2019) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**சில்லாலை,**
**பண்டத்தரிப்பு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 408 8295, 077 576 9180**

---

**அன்னை மடியில்** 08 . 10 . 1951



**ஆண்டவர் அடியில்** 01 . 07 . 2019

### முத்தையாபிள்ளை புஸ்பலிங்கராசா

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் அளவெட்டி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையாபிள்ளை புஸ்பலிங்கராசா 01.07.2019 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையாபிள்ளை சிவக்கொழுந்து தம்பதியரின் செல்வப்புதல்வனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை ஜானகியம்மா ஆகியோரின் அன்பு மூத்த மருமகனும், உத்தமதேவியின் அன்புக் கணவரும் தினேஷ்குமார், சரண்யன் ஆகியோரின் அன்புத் தந்தையும், முத்துவேல்ராஜீ, சிவலிங்கராசா, செல்வலிங்கராசா, முத்துராணி, சண்முகலிங்கராசா, சாந்தலிங்கராசா, விக்கினலிங்கராசா, நித்தியகுமாரி ஆகியோரின் அன்பு சகோதரனும், புஸ்பராணி, ரத்னகுமாரி, புவனேஸ்வரி, சிவலோகநாதன், ரத்னரூபி, வசந்தயோகினி, ரஞ்ஜினி, காலஞ்சென்றவர்களான இரவீந்திரன், உத்தமசீலன் மற்றும் சகுந்தலாதேவி, சந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2019) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மதியம் 12.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாமகள் வீதி, கொக்குவில்**
**கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 484 9479, 076 428 7607**

---

# தந்தை செல்வா கலையரங்கம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜீலை 2

தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட தந்தை செல்வா கலையரங்கம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொண்டு கலையரங்கத்தை திறந்து வைத்தார் பாடசாலை அதிபர் எழில் வேந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தந்தை செல்வாவின் புதல்வர் சந்திரகாந்தன், நாடாளுமன்ற உறுப்பி னர்கள், பாடசாலை சமூகத்தினர் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ ரி1)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் திருமதி கலையரசி குமாரசீலன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி புவனேஸ்வரி சிதம்பரப்பிள்ளை**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

---

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## வர்ணம் பூசுவதற்கான கூறுவிலை கோரல்

எமது சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு வர்ணம் பூசுவதற்கு கூலிக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 10.07.2019 ஆம் திகதிக்கு முன்னர் கூறு விலைகளை **"பொதுமுகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், கண்டிவீதி, சாவகச்சேரி"** என்னும் முகவரிக்கு நேரிலோ, அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கவும்

**குறிப்பு:**

- விண்ணப்பப்படிவங்களை சங்கத் தலைமைக் காரியாலத்தில் பெற்றுக்கொள்வதுடன் வேலை பற்றிய விவரங்களினை அலுவலக நாள்களில் நேரடியாக பார்வையிடலாம்.
- மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக 500/=வும் மீளளிக்க கூடிய வைப்பு பணமாக 3000/=வும் செலுத்துதல் வேண்டும்.
- பெயின்ற் வகைகள் யாவும் சங்கத்தினால் கொள்வனவு செய்து வழங்கப்படும்.

**சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்,**
**கண்டி வீதி, சாவகச்சேரி.**

**தலைவர்**

---

## மஹா சக்தியுள்ள வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள். என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

- காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
- காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
- பெற்றோர் விருப்பமின்மையா?
- கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
- வேலைத்தளத்தில் பிரச்சினையா?
- காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?

(இரகசியம் பேணப்படும்)

- நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்
**வேலு ராஜேஸ்வரி** அவர்கள்
மாத்தளை.
**0778 432 602 / 075 302 4239**
என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.

---

# பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தலைமைகள் தவறுகின்றன

*சபை உறுப்பினர் குற்றஞ்சாட்டுகிறார்*

யாழ்ப்பாணம், ஜீலை 2

தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அல்லாமல் அரசைப் பாதுகாக்கும் தூதுவர்களாகச் செயற்படுகின்றனர் என்று வலிகாமம் வடக்கு மீள்குடியமர்வு மறுவாழ்வுக் குழுவின் தலைவரும் மேற்படி பிரதேச சபையின் உறுப்பினருமான ச.சஜீவன் குற்றஞ் சாட்டியுள்ளார். யாழ்ப்பாணம் மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்னமும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவில்லை. ஆனால் விடுவிக்கப்பட்ட இடங்களில் ஒன்றான தையிட்டியில் பொது மக்களுக்குச் சொந்தமான காணியை ஆக்கிரமித்து பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருகிறது. வலிகாமம் வடக்கில் மதுபானசாலை அமைக்க அனுமதி கொடுக்காத நிலையில், அங்கு இராணுவத்தினர் நடத்தும் நலன்புரிக் கடைகளில் மதுபானம் விற்கப்படுகின்றது. இது தொடர்பில் பிரதேச சபையில் நான் தீர்மானம் கொண்டுவந்து அனைவரினதும் ஆதரவுடன் நிறைவேற்றியிருந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதற்குப் பிரதேச சபைத் தவிசாளரும் உடந்தையா என்றும் கேள்வி எழுப்புகின்றனர்.

இதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறுமிடத்து போராட்டங்களை மக்கள் முன்னெடுப்பதற்கும் தயாராகி வருகின்றனர் - என்றார். (கு-ரி1)

---

## காணி விற்பனைக்குண்டு

இருபாலை சந்திக்கும் கோண்டாவில் சந்திக்கும் மையத்தில் இராச வீதி, சந்தியில் 50 மீற்றர் தொலைவிலைமந்துள்ள 5 பரப்புக் காணி பொதுப் பாதையுடன் விற்பனைக்குண்டு.

(cs. 26295) (1.1.17)

**075 068 7421**

---

## வீடு வாடகைக்குண்டு

பாங்ஷால் வீதியில்
4 அறைகளுடன்
வீடு வாடகைக்குண்டு.
களஞ்சிய வசதிக்கும் உரியது.

**077 691 7030** (CS/26398) (1.1.17)

(காலை 9.00- நண்பகல் 12.00 மணிவரையும், மாலை 6.30 - இரவு 9.00 மணிவரையும் தொடர்பு கொள்ளலாம்.

---

ES Printers
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

## மரண அறிவித்தல்

### குணபாலசிங்கம் கமலாதேவி



**பிறப்பு** 18.06.1948

**இறப்பு** 01.07.2019

சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும், தற்போது திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட குணபாலசிங்கம் கமலாதேவி நேற்று (01.07.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா சின்னம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பள்ளை அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குணபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், சந்திரமோகன் (கமலாலயம் சிற்பக்கலைக்கூடம்-திருகோணமலை), சந்திரவதனி (கொலண்ட்), சந்திரகுமார், சந்திரதாஸன் (கலைவாணி கலையகம்-திருநெல்வேலி), யோகேஸ்வரி, ஸ்ரீரங்கன் ( Trinco Beach ) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரசாந்தினி, சந்திரகுமார், செல்வஸ்ரீ, கலைவாணி, பகீதரன், மலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும், நிலுக்ஷன், பானுஷா, பிருத்திகா, சபரீனா, சபரிஷன், சங்கவி, லோசன், அபிநயா, நிருஸ்றிகா, ரதுஸ்கா, மோனிஷா, சர்வின் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**48/85, இராஜவரோதயம் சதுக்கம்,**
**கண்டி வீதி, திருகோணமலை.**

**தகவல்:**
**பிள்ளைகள்.**

**T.P: 0777 061 798, 026 222 4303**

# மீண்டுவரட்டும் லிபியா!



உள்நாட்டுப் போரில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் லிபியாவிலி ருந்து நல்ல சமிக்ஞையொன்று வந்திருக்கிறது. ஐ.நாவின் ஆதரவுபெற்ற லிபிய அரசு அமைதிப் பேச்சை முன்னெடுக்க முடிவெ டுத்திருக்கிறது. லிபியாவின் திரிபோலியை மையமாகக் கொண்டு இயங்கும் அரசின் தலைமை அமைச்சர் பயாஸ் அல்சராஜ். ஐ.நாவின் உதவியுடன் தேசிய அமைதிப் பேச்சுக்கு ஏற்பாடு செய்யலாம் என்று கூறியிருக்கிறார்.

> எண்ணெய் வளம் மிகுந்த லிபியாவில் ஊடுருவி, அங்குள்ள வெவ்வேறு ராணுவங்களுக்கு ஆதரவு வழங்கிவரும் அமெரிக்கா, பிரிட்டன், வளைகுடா நாடுகள் போன்றவை லிபியாவின் தற்போதைய பிரச்சினைக்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். குறைந்தபட்சம், தற்போதைக் காவது தங்களது குறுகலான புவியரசியல் நாட்டங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, இந்தப் போரால் அங்கே கட்டவிழ்க்கப் பட்டிருக்கும் பயங்கரவாதக் குழுக்களை அடக்கியாண்டு, அந்தத நாட்டில் அமைதி ஏற்பட உதவ வேண்டும்.

**கடாபிக்குப் பிறகு**

2011ஆம் ஆண்டில் லிபியாவின் அப்போதைய சர்வாதிகாரி முகம்மது கடாபிக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்த பிறகு, அந்த நாடெங்கும் குழப்பம் நிலவ ஆரம்பித்தது. நேட்டோ படையினரின் ஊடுருவலால் அதிபர் பதவியிலிருந்து கடாபி தூக்கியெறியப்பட்டார். ஆனால், நான்கு தசாப்தங்களாக அவரால் ஆளப்பட்ட லிபியாவில் அதற்குப் பிறகு ஏற்பட்ட வெற்றிடத்தை உள்நாட்டவர்களாலும் சரி, அந்நிய சக்திகளாலும் சரி நிரப்பவே முடியவில்லை. தற்போது லிபியாவில் இரண்டு அரசுகள் உள்ளன. டப்ருக் அரசு லிபிய தேசிய ராணுவத்தின் ஆதரவு பெற்றது. திரிபோலியைத் தலைநகராகக் கொண்டு இயங்கும் அரசுக்கு பன்னாட்டு அங்கீகாரம் இருக்கிறது. பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிராகத் தான் போரிடுவதாகவும், தன் தலைமையின் கீழ் லிபியாவை ஒருங்கிணைக்கப் போவதாகவும் ஹப்தார் கூறிக்கொள்கிறார். அல்சராஜோ தன்னுடைய அரசுதான் சட்டபூர்வமானது என்கிறார்.

**குழப்பங்களின் ஆரம்பம்**

அல்சராஜின் அரசைக் கவிழ்ப்பதற்காகத் தனது ராணுவத் துருப்புகளை திரிபோலி நோக்கி ஹப்தார் செலுத்தியதுதான் தற்போதைய பிரச்சி னைக்குக் காரணம். திரிபோலி நகரத்துக்குக் கிழக்கிலும் தெற்கிலும் ஹப்தாரின் படைகள் போரிடுகின்றன. நகரத்துக்கு வெளியில் அரசுக்கு ஆதரவான படைகளால் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். பன்னாட்டுச் சமூகத்தின் வேண்டுகோள்களை மீறியும் இரண்டு தரப்புகளுமே போர்நிறுத்தம் செய்ய மறுத்துவந்தன. அமெரிக்கா, எகிப்து, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் ஹப்தாருக்கு ஆதரவாக இருக்கின்றன. துருக்கி, கட்டார் இரண்டும் திரிபோலி அரசை ஆதரிக்கின்றன. ஆட்சி மாற்றத்தால் ஏற்படும் போர்களால் ஒரு நாட்டில் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதற்கு லிபியா ஓர் உதாரணம். ஈராக், லிபியா போன்ற நாடுகளில் ராணுவத்தால் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்தது வேண்டுமானால் எளிதாக இருந்திருக்கலாம். ஆனால், அதற்குப் பிறகு புதிய தேசத்தைக் கட்டமைப்பது எளிதல்ல. அது ராணுவ சக்தியைக் கொண்டு செய்யப்படக்கூடியதுமல்ல.

**லிபியா மட்டில் பன்னாடுகளுக்கு உள்ள பொறுப்புக்கள் எவை**

எண்ணெய் வளம் மிகுந்த லிபியாவில் ஊடுருவி, அங்குள்ள வெவ்வேறு ராணுவங்களுக்கு ஆதரவு வழங்கிவரும் அமெரிக்கா, பிரிட்டன், வளைகுடா நாடுகள் போன்றவை லிபியாவின் தற்போதைய பிரச்சினைக்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். குறைந்தபட்சம், தற்போதைக்காவது தங்களது குறுகலான புவியரசியல் நாட்டங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, இந்தப் போரால் அங்கே கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் பயங்கரவாதக் குழுக்களை அடக்கியாண்டு, அந்தத நாட்டில் அமைதி ஏற்பட உதவ வேண்டும். இந்த நிலையில் போர்நிறுத்தம் ஏற்பட்டு, அதை எல்லாத் தரப்புகளும் மதித்து நடந்தால் மட்டுமே தலைமை அமைச்சரின் அல்சராஜின் யோசனையானது ஒரு புதிய தொடக்கமாக அமையும். *நன்றி - தீ ஹிந்து*





தேசிய போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தின் இறுதி நாளான நேற்று வேலணை மத்திய கல்லூரிக்கு முன் பாக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டன. பாடசாலையின் அதிபர் சி.கிருபாகரன் தலை மையில் பொறுப்பாசிரியர் இ.மகேஸ்வரனின் வழிகாட் டலில் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. பாடசா லைப் பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் அதில் கலந்து கொண்டனர். (ஏ)

## மரக்குற்றிகள் கடத்த முயன்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஜூலை 2
முல்லைத்தீவு விசுவமடு றெட்பானா பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மரக் குற்றிகளைக் கொண்டு செல்ல முயன்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

உழவு இயந்திரம் ஒன்றில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான பால மரக் குற்றிகளைக் கடத்திச் செல்ல முயன்றபோது அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் என்றும், அவரை எதிர்வரும் 8ஆம் திகதிரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்ட்து என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஏ-ரி3)

# வாக்களிக்க முன்னர் பல தடவை சிந்தித்து வாக்களிக்க வேண்டும்

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு



மன்னார், ஜூலை 2
உங்களுடைய வாக்குகளின் மூலம் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப் படுகின்றார். தெரிவு செய்யப்பட்டவர் மக்களின் கனவுகளை நினைவாக்காது தமது கனவை நினைவாக்க ஆரம்பித்து விடுகின்றார். தனது மனைவி, உறவி னர், சொந்தக்காரர்களின் கனவுகளை நினைவாக்குகின்றார். இப்படி கனவு களை நனவாக்கியவர்கள் கடந்த அர சில் காணப்பட்டார்கள்.

இவ்வாறு வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேம தாச தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் நானாட்டான் பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை கிராமத்தில் அமைக்கப்பட்ட 211ஆவது மாதிரிக் கிராமமான 'குறிஞ்சி நகர்' கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் நேற்றுப் பயனாளிகளிடம் கையளிக் கப்பட்டன. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது
நாங்கள் நல்ல வீட்டில் வாழ வேண் டும், எங்கள் பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் அடைய வேண்டும், நாங்கள் முன்னுக்கு வர வேண்டும் என்ற பல்வேறு கனவுகளுடன் நீங் கள் அனைவரும் இங்கே வந்துள்ளீர் கள்.

உங்களுக்காக ஒருவரைத் தெரிவு செய்கின்றபோது ஒரு தடவை அல்ல, பல தடவை சிந்தித்துச் செயற்படுங் கள். உங்களுக்காக என்ன செய்தார் என்பதைச் சிந்தியுங்கள்.

முன்னாள் அரச தலைவர் ரணசிங்க பிரேமதாச அவர்களுடைய வழியில் நான் உங்களுக்கு உங்கள் அனை வருடைய கனவுகளையும் எதிர் காலத்திலே ஏற்படுத்தித் தருவேன். என்றார். (ஏ-56)





## தான்தோன்றீஸ்வரர் ஆலய கொடியேற்றம்

முல்லைத்தீவு, ஜூலை 2
வடக்கு மாகாணத்தில் வரலாற்று சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கற்சிலைமடு சம்மளந்துழாய் ஆலயத்தில் சிறப்புப் பூசைகள் இடம்பெற்று அங்கிருந்து எருது வாகனத்தில் கொடிச் சீலை ஊர்வலமாக மங்கள வாத்தியத்துடன் எடுத்து வரப்பட்டு கொடியேற்றம் இடம்பெற்றது. தொடர்ந்து 15 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 16ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் திருவிழா நிறைவுபெறவுள்ளது. (ஏ-ரி3)

## வடக்கு– கிழக்கைச் சேர்ந்த வர்த்தக கைத்தொழில் சம்மேளன ஒன்றுகூடல் வவுனியாவில் நடந்தது

வவுனியா, ஜூலை 2
வடக்குகிழக்கு மாகாணங்களுக்கான வர்த்தககைத்தொழில் சம்மேளன ஒன்றுகூடல் வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளன தலைவர் கே.அமிர்தலிங்கம் தலைமையில் நடந்த ஒன்றுகூடலில், வடக்கு மற்றும் கிழக்கில் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், எதிர்காலத்தில் எதிர்நோக்கும் சவால்கள், வடக்கு - கிழக்கில் உள்ள வளங்கள், வியாபார விருத்திகளை எவ்வாறு மேற்கொள்வது, பொருளாதார வீழ்ச்சியை எவ்வாறு சீர் செய்வது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

வடக்கு- கிழக்கைச் சேர்ந்த வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர்கள், உபதலைவர்கள், செயலர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். (தி)







## நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டோருக்கு எச்சரிக்கை

வவுனியா, ஜூலை 2
வவுனியா நகரப் பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறாக நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் வவுனியா நகர சபை அலுவலர்களால் நேற்று எச்சரிக்கை செய்யப்பட்டுள் ளனர். நடைபாதைகளில் விற்பனை செய்யப்பட்ட மரக்கறி வகைகள் அகற்றப்பட்டதுடன், எதிர்காலத்தில் இவ்வாறு வியாபாரம் செய்தால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்ப டும் என்று நகர சபை அலுவலர்கள் வியாபாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

ஹொறவப்பொத்தான வீதி, இலுப்பையடி, சந்தைசுற்று வட்ட வீதி போன்ற இடங்களில் போக்குவரத்துக்கு இடை யூறுகள் ஏற்படுத்தும் வகையில் மரக்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பொருட்களை விற்பனை செய்த வியா பாரிகளுக்கே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நடைபாதையில் வியாபாரம் மேற்கொள்ளப்படும்போது பொதுமக்கள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று கிடைத்த முறைப்பாட்டுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று நகர சபை அலுவலர்கள் தெரி வித்தனர். (ஏ)

## புதையல் தோண்டிய 14 பேருக்கு தண்டம்

முல்லைத்தீவு, ஜூலை 2
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் புதையல் தோண்ட முயன் றனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட பெண் உட்பட 14 பேருக்கு முல்லைத்தீவு நீதி வான் நீதிமன்று தண்டம் விதித்தது.

இவர்கள்கடந்த 27ஆம்திகதிநீதிமன்றில்முற்படுத்தப்பட்போது இருவருக்குப் பிணை அனுமதி வழங்கிய நீதிமன்று, ஏனை யோரை நேற்றுவரை விளக்கமறியலில் வைத்தது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஒவ்வொருவருக்கும் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண் டம் விதிக்கப்பட்டது. (ஏ-ரி3)

# தெரிவுக் குழுவின் மீது நம்பிக்கையே இல்லை

## தயாசிறி கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 2

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழு மீது எமக்கு சிறிதளவும் நம்பிக்கை கிடையாது. எப்படியாவது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீது பழி சுமத்த வேண்டும் நோக்கத்திலேயே தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பொல்காவெல பிரதேசத்தில் சிறிலங்கா சுதந்திர கட்சி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்காவுக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சை அரச தலைவர் வழங்காத கோபத்தை அவர் தெரிவுக்குழு விசாரணைகளின் போது சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றார். இதேபோன்றுதான் ஏனைய உறுப்பினர்களும் ஒவ்வொரு தனிப்பட்ட காரணங்களுக்காக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் தொடர்ந்தும் நீடிக்காது. அதனால் எந்த தீர்வும் கிட்டாது - என்றார்.

அதேவேளை, தாஜ்சமுத்திரா விடுதியில் குண்டு வெடிப்பு நடைபெறாமைக்குக் காரணம் அந்த நேரத்தில் அங்கு தங்கியிருந்த பெரும் புள்ளிகளுக்குத்தெரியும் என்று தயாசிறி ஜயசேகர அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அதையடுத்து அவரைச் சாட்சியம் வழங்க வருமாறு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அழைப்பு விடுத்திருந்தது. எனினும் அவர் தெரிவுக்குழுவில் சாட்சியம் அளிக்கச் செல்லவில்லை. அதையடுத்து தெரிவுக் குழு அவருக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

இந்தநிலையிலேயே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ)



## கிளிநொச்சியில் விபத்து ஒருவருக்குப் படுகாயம்

கிளிநொச்சி, ஜூலை 2

கிளிநொச்சி, பரந்தனில் நேற்று அதிகாலை நடந்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். தென்னிலங்கையில் இருந்து பொருள்களை ஏற்றி வந்த இரு பாரவூர்திகளே விபத்துக்குள்ளாகியுள்ளன.

பயணித்துக் கொண்டிருந்த பாரவூர்தி ஒன்றின் சக்கரத்தில் இருந்து காற்று வெளியேறியதை அடுத்து அது சடுதியாக நிறுத்தப்பட்டது என்றும், அந்தப் பாரவூர்திக்குப் பின்பாகப் பயணித்துக் கொண்டிருந்த மற்றொரு பாரவூர்தி அதனுடன் விபத்துக்குள்ளானது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாரவூர்தியின் உதவியாளர் படுகாயமடைந்துள்ளார். கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-6,222)

## பல்கலை கல்வி சாரா ஊழியர் நியமனத்தில் சிக்கல் இல்லை

### தகுதிவாய்ந்த அதிகாரி விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கல்வி சாரா ஊழியர்கள் நியமனம் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. கல்வி சாரா ஊழியர்களின் நியமனம் உரிய வழிமுறைகளின் அடிப்படையில் நடைபெறும். அதில் எந்தவொரு சிக்கலும் இல்லை. இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்துள்ளார். இந்த நியமனங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பேரவைக்கு விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பதவி வகித்த பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் கடந்த மே மாதம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நீக்கப்பட்டார். அதன்பின்னர் பல்கலைக் கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியாகப் பேராசிரியர் க.கந்தசாமி உயர் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டார். அவர் நியமிக்கப்பட்ட பின்னரான முதலாவது பேரவைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அதில் கல்விசாரா ஊழியர்களின் நியமனங்கள் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன என்றும் அதன் உண்மைத் தன்மை என்ன என்று விளக்கமளிக்க வேண்டும் என்றும் மருத்துவ பீடாதிபதி மருத்துவ நிபுணர் ரவிராஜ் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் கேட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் நியமனம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. இதுதொடர்பில் எனக்கு பல தரப்புகளிடமிருந்து மாறுபட்ட கருத்துக்கள் கிடைத்தன.

ஆனால் கல்விசாரா ஊழியர்கள் நியமனம் உரிய வழிமுறைகள் நடைமுறைகளின் அடிப்படையில் இடம்பெறும். அதில் எந்தவொரு சிக்கல்களும் கிடையாது என்று தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி விளக்கமளித்துள்ளார். (எ-105)

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

சாவகச்சேரி, ஜூலை 2

உந்துருளி விபத்தில் சிக்கிக் காயமடைந்த 27 வயது இளைஞர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

கைதடி தெற்கைச் சேர்ந்த கருணலிங்கம் சதீஸ்வரன் (வயது-27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து ஏ9 வீதியில் கைதடிப் பாலத்தில் இருந்து தென்மராட்சி தெற்கு தச்சன்தோப்புக்குச் செல்லும் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

கைதடியில் இருந்து சென்ற உந்துருளியும், கோவிலாக்கண்டியிலிருந்து ஏ9 நோக்கிப் பயணித்த உந்துருளியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. அதில் உந்துருளியில் பயணித்த இருவர் காயமடைந்தனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். படுகாயமடைந்திருந்த சதீஸ்கரன் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் சிக்கிக் காயமடைந்த மற்றையவர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார்.

அதேவேளை, இந்த வீதியில் சுமார் 3 கிலோமீற்றர் தூரமே சீரமைக்கப்பட்டுள்ளது என்றும், ஏனைய பகுதிகள் சீரமைக்கப்படாதுள்ளன என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். வீதியால் பயணிப்பது சிரமமாக உள்ளது என்றும் தொடர் குழிகள் காணப்படுவதால் அந்தப் பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் நடக்கின்றன என்றும் மக்கள் கூறுகின்றனர். வீதியைச் சீரமைப்பதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-9)

## குறிஞ்சிநகர் கிராமத்தை நேற்றுத் திறந்தார் சஜித்

மன்னார், ஜூலை 2

மன்னார் மடுக்கரைக் கிராமத்தில் நேற்று மாதிரிக் கிராமம் ஒன்று நேற்றுத் திறக்கப்பட்டது. தேசிய வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச கிராமத்தைத் திறந்து வைத்தார்.

குறிஞ்சி நகர் என்று பெயரிடப்பட்ட இந்தக் கிராமம் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அமைக்கப்பட்ட 211 ஆவது மாதிரிக் கிராமம் ஆகும். அங்கு 42 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. 5 லட்சம் ரூபா பெறுமதியான இந்த வீட்டுத் திட்டத்தில், முடிக்கப்படாத கட்டுமானங்களை நிறைவு செய்வதற்காகப் பயனாளிகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபா குறைந்த வட்டிக் கடனும் வழங்கப்பட்டுள்ளது. (எ-213)




## பெண் மீது தாக்குதல் நடத்தி சங்கிலி அறுப்பதற்கு முயற்சி

வவுனியா, ஜூலை 2

வவுனியா கோமரசங்குளத்தில் பெண் ஒருவர் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தி, அவரது தங்கச் சங்கிலியைப் பறிக்க முயன்றுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த பெண் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. கோமரசங்குளத்தில் இருந்து மகாறம்மைக்குளம் நோக்கி பெண்ணும், கணவரும், பிள்ளையும் உந்துருளியில் பயணித்துள்ளனர். அவர்களைப் பின்தொடர்ந்து உந்துருளியில் வந்த இனந்தெரியாதவர்கள் கோமரசங்குளம் பகுதியில் வைத்து உந்துருளியின் பின்னிருக்கையில் இருந்து பயணித்த பெண்ணை தடியால் தாக்கியுள்ளனர். அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுக்க முயன்றுள்ளனர். அவர்கள் அபயக் குரல் எழுப்பியதை அடுத்து தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-222)

## நுங்குக்குப் பனை ஏறியவர் தவறி விழுந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

நுங்கு வெட்டுவதற்காக பனை மரத்தில் ஏறித் தவறி விழுந்து படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் சுன்னாகம் பகுதியில் கடந்த 27ஆம் திகதி நடந்துள்ளது.

சிவபூதராயர் கோயில் வீதி, சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த பொன்னர் இராசதுரை (வயது-63) என்பவரே உயிரிழந்துள்ளார். வீட்டின் அருகில் உள்ள காணியில் நுங்கு வெட்டுவதற்காக இவர் பனை மரத்தில் ஏறியுள்ளார். மரத்தில் வடம் இட்டவாறு நுங்கு வெட்டிக் கொண்டிருந்தபோது வடம் நழுவியதால் அவர் மரத்தில் இருந்து தவறி விழுந்துள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் அவர் உடனடியாக தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பயனின்றி கடந்த சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (எ-105)

# அனுமதிபெறாத மண் அகழ்வு கல்லாறுப் பகுதியில் தாராளம்

## சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்கிறோம் என்கிறார் குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி

கிளிநொச்சி ஜூலை 2

கிளிநொச்சி கல்லாறு பகுதியில் வரையறையின்றி மண்ணகழ்வு தொடர்கிறது. அதைத் தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதியை அண்மித்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



அங்கு காட்டுப் பகுதி அழிக்கப்பட்டு மண்ணகழ்வு இடம்பெற்று வருகின்றது. மண்ணகழ்வு இடம்பெற்று வரும் பகுதி வனவள பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான அதேவேளை, பறவைகள் சரணாலயமும் அந்தப் பகுதியில் காணப்படுகின்றது. அங்கு சுமார் 5 அடிக்கு மேல் தோண்டப்பட்டு மண்ணகழ்வு வரையறையின்றித் தொடர்கிறது.

குறித்த சட்டவிரோத மண்ணகழ்வு தொடர்பில் பல்வேறு தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மண்ணகழ்வு காரணமாகக் கடல் தண்ணீர் உட்புகும் அபாயம் காணப்படுகிறது.

எதிர்கால சந்ததி இதனால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மண்ணகழ்வு தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பாக மாவட்டப் போதைப் பொருள் மற்றும் குற்றங்களைத் தடுக்கும் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்கவிடம் கேட்டபோது, "குறித்த பகுதியில் அனுமதியின்றி மண் ஏற்றிச் செல்லும் வாகனங்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அங்கு தொடர்ந்து குறித்த இடத்தில் நடவடிக்கைகள் தமது பிரிவினால் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறன" என்று தெரிவித்தார். (த-6)

---

## அலங்கார திருவிழா

சாவகச்சேரி, ஜூலை 2

யாழ்ப்பாணம், சாவகச்சேரி அல்லாரை வடக்கு தாளையடி தான்தோன்றி கண்ணகாபரமேஸ்வரி ஆலய அலங்காரத் திருவிழா நாளைமறுதினம் 4ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 15ஆம் திகதி சிறப்பு சங்குமுழுக்கு பூசைகளுடன் திருவிழா நிறைவு பெறும். திருவிழா கிரியைகள் சிவஸ்ரீ கிருஷ்ணராமக் குருக்கள் தலைமையில் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஜ-9)



## திண்ம கழிவுகள் அகற்றல்

கொடிகாமம்,ஜூலை 2

சாவகச்சேரி, மறவன்புலவு சகலகலா வித்தியால யத்தின் வளாகத்தில் காணப்பட்ட திண்மக் கழிவுகள் கடந்த சனிக்கிழமை அகற்றப்பட்டன.

கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்தல் தொடர்பாக வித்தியாலயத்தின் அதிபர் சாவகச்சேரிப் பிரதேச சபை வட்டார உறுப்பினரான அ.நிமலரோவுக்கு தெரியப் படுத்தியதை அடுத்து இந்த கழிவுகள் அகற்றப்பட்டன. வட்டார உறுப்பினர் தனது சொந்த செலவில் வாகனத்தை ஒழுங்குபடுத்தி திண்மக் கழிவுகளை அகற்றியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-159)



## சுற்றாடல்சார் செயற்பாட்டு முகாம்

கொடிகாமம், ஜூலை 2

யாழ்ப்பாணம், கெற்பேலி அ.த.க பாடசாலை மாணவர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாட்டு முகாம் வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் க.ஞானராசா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.சிவதாசன் கலந்துகொண்டார். (ஜ-159)

---





## பொலிஸ் நேர்முகத் தேர்வில் அதிகளவு தமிழ் இளையோர்

வவுனியா, ஜூலை 2

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள இளையோரைப் பொலிஸ் திணைக்களத்தில் இணைத்துக்கொள்வதற்கான ஆரம்ப நேர்முகத் தேர்வு வவுனியா, கண்டி வீதியிலுள்ள பொலிஸ் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது.

இதில் அதிக எண்ணிக்கையான தமிழ் இளையவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் தமிழ் பொலிஸாரின் பற்றாக் குறையைச் சீர்செய்யும் நோக்கில் குறித்த நேர்முகத்தேர்வு நடைபெற்றது.

இவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களுக்கான முதற்கட்ட தேர்வுகள் கடந்த வாரம் நடைபெற்றிருந்தன.

இதுவரை காலமும் பொலிஸ் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வுகள் தென்னிலங்கையிலேயே இடம்பெற்று வந்த நிலையில், தற்போது இந்த நேர்முகத் தேர்வுகள் வவுனியாவில் நடைபெற்று வருகின்றன.

இவர்களுக்கான பயிற்சிகளும் வடக்கு மாகாணத்திலேயே வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

## அரச ஊழியர்களின் ஊதியம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 2

2019ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்ட யோசனைகளுக்கு அமைய அரச ஊழியர்களுக்கான ஊதியம் நேற்றுத் திங்கட்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டது.

இதற்கமைய சுமார் 11 லட்சம் அரச ஊழியர்களுக்கு இரண்டாயிரத்து 500 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு சம்பளங்களுடன் மேலதிகமாகச் சேர்க்கப்படவுள்ளது.

பாதுகாப்புத் தரப்பினருக்கான கொடுப்பனவுகள் மேலும் அதிகரிக்கப்படவுள்ளது. ஓய்வூதிய கொடுப்பனவிலுள்ள முரண்பாடுகளை நீக்கிச் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசு சுமார் நான்காயிரம் கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இந்த இடைக்காலக் கொடுப்பனவுக்கு முன்னதாக வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு என்ற வகையில் வழங்கப்பட்டு வந்த ஏழாயிரத்து 800 ரூபா தொடர்ந்தும் வழங்கப்படும் என்று நிதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## 26 மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கல்

முல்லைத்தீவு, ஜூலை 2

துணுக்காய், மாந்தை கிழக்குப் பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட 26 மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன.

39 மாணவர்களுக்குக் கல்விக்கான மாதாந்த கொடுப்பனவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. துணுக்காய், மாந்தை கிழக்கு சுவிஸ் வாழ் உறவுகளால் உருவாக்கப்பட்ட துணுக்காய், மாந்தைகிழக்கு மக்கள் ஒன்றியம் மூலமாக அவை வழங்கப்பட்டன. (த-222)



## கான்ஸ்டபில் பதவிக்கான மருத்துவப் பரிசோதனைகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 2

பொலிஸ் கான்ஸ்டபில் பதவிக்கு ஆள் சேர்ப்பு செய்வதற்கான மருத்துவ மற்றும் உடல் ஆரோக்கிய பரிசோதனைகள் நேற்று இடம்பெற்றன.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் நெறிப்படுத்தலின் கீழ் பொலிஸ் ஆள் சேர்ப்பு பிரிவின் ஏற்பாட்டில் கண்டி வீதியில் அமைந்துள்ள பொலிஸ் கட்டட வளாகத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் வாய்ப்பை எதிர்பார்த் திருக்கும் இளைஞர்களை பொலிஸ் கான்ஸ்டபில் பதவிக்கு உள்ளீர்ப்பதற்கான நேர்முக தேர்வுக்காக பதிவு செய்யும் நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கமண்டபத்தில் கடந்த மாதம் 18 திகதி நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவில் இருந்து சுமார் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தமது கல்விச் சான்றிதழ்கள் மற்றும் விண்ணப்பங்களை செலுத்தி பதிவுகளை மேற்கொண்டு அங்கத்துவபடிவத்தைப் பெற்று கொண்டனர். அவர்களுக்கான மருத்துவம் மற்றும் உடல் சார்ந்த பரிசோதனைகளே நேற்று நடைபெற்றன. இந்த தேர்வுகள் இதுவரை காலமும் வடக்கு மாகாணத்துக்கு வெளியே தென்னிலங்கையில் நடைபெற்றதுடன் ,பயிற்சிகளும் அங்கு தான் நடைபெற்று வந்தன.ஆனால் இம்முறை தெரிவுகள் ,பரிசோதனைகள் அனைத்தும் வடக்கில் நடைபெற்று ஆள் சேர்ப்பு நடைபெறும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஜ-7)

# போதைப்பொருள்களை ஒழித்தால் பொருளாதாரம் சிறந்து விளங்கும்

## பிரதேச செயலர் வலியுறுத்து

முல்லைத்தீவு, ஜூலை 2
போதைப் பொருள்களை ஒழிப்பதன் மூலமாக நல்ல எதிர்கால சமுதாயத்தைக் கட்டி எழுப்பமுடியும். இதன் மூலமாக புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைப் பொருளாதார வளம்மிக்க பிரதேசமாக மாற்றமுடியும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார். புதுக்குடியிருப்பில் நேற்று நடந்த போதைப்பொருள் ஒழிப்பு வார இறுதி விழிப்புணர்வில் உரையாற்றுகையிலே தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்கள் சமூகத்தில் போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்தி, இல்லாது ஒழிக்க வேண்டிய கடப்பாடு எம் அனைவரிடத்திலும் இருக்கின்றது.
இங்கு அனைவரும் இணைந்துசெயற்படுவதனூடாகப் போதைப் பொருள்களை, போதையைக் கட்டுப்படுத்தமுடியும். புதுக்குடியிருப்பைப் போதையற்ற பகுதியாகஉருவாக்கிக்கொள்ளமுடியும். போதையிலிருந்து அழிந்துகொண்டிருக்கும் சமுதாயத்தை விடுவிக்கின்ற கடப்பாடு எங்கள் சமூகத்தைச் சேர்ந்திருக்கின்றது. அனைத்து மக்களும் போதைக்குஎதிரானவிழிப்புணர்வுடன் செயற்படும்போது எங்கள் சமுதாயத்தைப் போதையற்ற சமுதாயமாக உருவாக்க முடியும் -என்றார். (த-ரி3)

## விழிப்புணர்வு கருத்தமர்வுகள்



கொடிகாமம், ஜூலை 2
கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்கான போதை ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தமர்வு ஒன்று இடம்பெற்றது.
போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இக்கருத்தமர்வு கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது.
நிகழ்வில்கொடிகாமம்பொலிஸ்அலுவலர்களான ஜெயதிலக , ரி.சுகந்தன், சாவகச்சேரி மதுவரி நிலையமதுவரிப்பரிசோதகர்ஏ.ராஜேந்திரகுமார், பெற்றோர்கள்ஆசிரியர்கள், மாணவர்கள்கலந்து கொண்டனர். (ஜ-159)

öööö



கொடிகாமம், ஜூலை 2
போதைப்பொருள்ஒழிப்புவாரத்தைமுன்னிட்டு யாழ்ப்பாணம் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை போதை ஒழிப்புதொடர்பானகருத்தமர்வுநடைபெற்றது.
சாவகச்சேரி பிரதேச சபையின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.
சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன் வளவாளராக கலந்து கொண்டு போதைப்பொருள் பாவிப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் நோய்கள் தொடர்பான கருத்துரை வழங்கினார். (ஜ-159)

öööö



கொடிகாமம், ஜூலை 2
போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயத்தில் போதை ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தமர்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
பாடசாலை அதிபர் திருமதி ஜீ.வளர்மதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி மதுவரி நிலைய மதுவரிப் பரிசோதகர் ஏ. ராஜேந்திரகுமார் வளவாளராக கலந்து கொண்டுபோதைதொடர்பானவிழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கினார்.
இந்தக்கருத்தமர்வில்மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள்கலந்துகொண்டனர். (ஜ159)



## போதை ஒழிப்பு வாரத்தின் இறுதிநாள் நிகழ்வுகள்

மருதங்கேணி, ஜூலை 2
தேசியப்போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில்நேற்றுமுற்பகல் 9:30 மணியளவில் இடம் பெற்றன.
பருத்தித்துறைஆதாரமருத்துவமனை, வடமராட்சி வடக்குவலயக்கல்விபணிமனை மற்றும் வடமராட்சி வடக்குப்பிரதேசசெயலகம் ஆகியவை இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.
பருத்தித்துறைபிரதேசசெயலகம்முன்பாகஆரம்பமான போதை தடுப்பு விழிப்புணர்வுப் பேரணி பருத்தித்துறை ஆதார மருத்துவமனையைச்சென்றடைந்தது.
அதன் பின்னர் மருத்துவமனையில் விழிப்புணர்வுக் கூட்டம் இடம்பெற்றது
பருத்தித்துறைஆதாரமருத்துவமனைத் திட்டமிடல் பிரிவு மருத்துவ அதிகாரி மருத்துவர் கமலநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்தலைமை உரையைப்பருத்தித்துறைஆதார மருத்துவமனைப் பணிப்பாளர் வழங்கினார்.
தொடர்ந்து கருத்துரைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், வடக்குமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், மன நல மருத்துவ நிபுணர் சிவசுதன், வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் ரவீந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வில்பருத்தித்துறைபிரதேச செயலர்சிறி, பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.ச.அரியகுமார், உட்பட பலர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர். (ஜ-160)

## போதைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வுகள்

வவுனியா, ஜூலை 2
போதைப்பொருள்ஒழிப்பு வாரத்தில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வுகள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றன.
நிகழ்வில்தேசியக்கொடியை பிரதேச செயலர் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து " நான் போதையை எதிர்க்கின்றேன்" என்ற வாசகத்தைத் தாங்கிய பலூன்கள் பறக்கவிடப்பட்டன. அத்துடன் போதைக்கு எதிரான வாசகங்கள் பொறிக்கப்பட்டஸ்ரிக்கர்கள் வாகனங்களில் ஒட்டப்பட்டன. (ஜ-222)



## போதை ஒழிப்புப் பேரணி



வவுனியா, ஜூலை 2
போதை ஒழிப்பு வாரத்தின் இறுதி நாளான நேற்று வவுனியாவில் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று இடம்பெற்றது.
வவுனியா கண்டி வீதியிலுள்ள பௌத்த விகாரையிலிருந்து ஆரம்பமான போதை ஒழிப்புப் பேரணி கண்டி முதன்மை வீதி வழியாக சென்று மணிக்கூட்டு வீதி வழியாக திரும்பவும் பௌத்த விகாரையைச் சென்றடைந்தது.
சிவில் பாதுகாப்புப்படைப் பிரிவின் ஏற்பாட்டில்இடம்பெற்றபேரணியில் சிவில் பாதுகாப்புப்படையினர், பொலிஸார், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் என 500 க்கு மேற்பட்டடோர் கலந்துகொண்டனர்.
"குடிகுடியைக்கெடுக்கும், பாலகரை குடி என்கின்ற பாதாளத்தில் தள்ளாதே, போதை அற்ற தேசத்தில் வாழ்வோம், போதை பொருளற்ற நாட்டைக்கட்டியெழுப்புவோம், மதுவிலிருந்து வாலிபரைப் பாதுகாப்போம்"போன்றவாசகங்கள்எழுதப் பட்டபதாகைகளைத்தாங்கியவாறு பேரணியில் கலந்துகொண்டனர்.
அரசதலைவர் செயலகத்தின் ஏற்பாட்டில் நாடாளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் போதை ஒழிப்பு வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக இப் போதை ஒழிப்பு பேரணிஇடம்பெற்றது. (ஜ)

## போதை ஒழிப்பு வாசகம் தாங்கிய பலூன்கள் பறக்கவிடப்பட்டன

வவுனியா, ஜூலை 2
போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு போதைத்தடுப்பு வாசகங்களைத் தாங்கிய பலூன்கள் பறக்கவிடும் நிகழ்வு வவுனியா தெற்கு வலயக்கல்வி திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது.
வவுனியாதெற்குவலயக்கல்விப்பணிப்பாளர் முத்துராதாகிருஷ்ணன்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.
பலூன்கள் பறக்க விடப்பட்டதுடன் போதைப் பொருள் தொடர்பான விழிப்பு ணர்வுக் கருத்துரைகளும் இடம்பெற்றன.
நிகழ்வில்வவுனியாதெற்கு, வலயபிரதிகல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், அலுவலர்கள், ஊழியர்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர். (ஐ)



# பௌத்த தேசியவாதம் மீள தலைதூக்கியுள்ளது தமிழர்களைப் பலமாக்கி ஒன்றுபடவேண்டும்

## பேராளர் மாநாட்டில் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
1970ஆம் ஆண்டுகளில் இலங்கையில் காணப்பட்ட சிங்கள பௌத்த தேசியவாதம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. தமிழர்களைப் போன்று இன்று முஸ்லிம்களும் நசுக்கப்படுகின்றனர். பன்னாடுகளிலே ஒன்றரை மில்லியன் தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

எமது போராட்டம் பன்னாடுகள் மயப்படுத்தப்பட்ட போராட்டமாக மாறியுள்ளது. தமிழர்களைப் பலமாக்கி, ஒன்றுபட்டு முன்னேறிச் செல்லவேண்டும்.

இவ்வாறு உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இமானுவேல் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் 16ஆவது பேராளர் மாநாடு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. உலகத் தமிழர் பேரவையின் தலைவர் 'இமானுவேல் எழுதிய இரண்டு நூல்களும் அதில் வெளியிடப்பட்டன. நூல்களை வெளியிடுவதற்கு முன்னர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் எங்களுடைய போராட்டம் பன்னாட்டு மயமாக்கப்பட்டுள்ளது. ஜனநாயகப் போராட்டத்தின் பின்னர், ஆயுதப் போராட்டம் இடம்பெற்று இப்போது பன்னாட்டு மயமாக்கப்பட்ட போராட்டத்திலே நாங்களும், இங்கே வாழும் மக்களுமாக பன்னாடுகளிலே ஒன்றரை மில்லியன் தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களையும் இணைத்து நாங்கள் போராடுகிறோம். அதனால்த் தான் உங்கள் முன்னிலையில் அவர்களுடைய வாழ்த்துக்களைக் கொண்டுவந்து இந்தப் போரராட்டத்தின் கருத்தை ஒரு மனிதன், ஒரு குரு, யாழ்ப்பாணத்திலே பிறந்து வளர்ந்தவன், இந்த முற்றவெளியிலே செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம் ஆகிய எல்லோரது உரைகளையும் கேட்டு ரசித்தவன், நான் மாணவனாக இருந்த காலத்திலே சிங்களச் சட்டம் பிறப்பித்தபோது, கொழும்பு கலாசாலையிலே அகில இலங்கை வாலிபர் முன்னணியிலேசேர்ந்து நானும் கறுப்புக் கொடிபிடித்தேன். பலபோராட்டங்களில் பங்குபற்றியுள்ளேன்.

அன்றுதொட்டு இற்றை வரை தமிழர்களின் தலைவர்கள் எல்லோருடனும், அது ஜி.ஜி. பொன்னம்பலமோ, செல்வநாயகமோ அவர்களுடன் சேர்ந்த சகாக்களோ, அதன்பின்னர்வந்தபிரபாகரனோ அல்லது இன்று இருக்கும் எங்களுடைய சம்பந்தனோ உங்கள் எல்லோருடனும் நான் ஒத்துழைத்து குரல்கொடுத்து வருகிறேன். இது எனக்கு கிடைத்த பெரும் பாக்கியம்.

### பன்னாட்டு மயப்பட்ட போராட்டம்

86ஆம் ஆண்டுக்கு நான் குருவாக யாழ்ப்பாணத்துக்கு வந்த தன் பின்னர் பிரபாகரனுடனும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடனும் வெவ்வேறு விடயங்களிலே நான் ஒன்றாக மக்களின் தலைவனாக இங்கே போராடத் தொடங்கி விட்டேன். 1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் நான் ஜேர்மனியில் இருந்த போது எனது பணியை உலக நாடுகளுக்குச் சென்று சுதந்திரமாக ஆற்றக்கூடியதாக இருந்தது. ஏனென்றால் இலங்கை அரசு என்னை ஒரு பயங்கரவாதியாக இனங்கண்டு என்னை வெறுத்தது அந்த நாள்களிலேதான் நான் என்னுடைய வெளியீடுகளை வெளிக்கொணர்ந்தேன்.

இங்கு அதைக் கொண்டுவரவில்லை. அந்தவகையிலே இரு சிறு புத்தகங்களை இன்று வெளியிடுகிறேன்.

அந்தப் புத்தகங்களை வெளியிடுவதற்கு தகுதிவாய்ந்த ஒரு தலைவர் சம்பந்தன் ஐயாவே. அவரும் நானும் ஒரே கல்லூரியில் படித்தோம். அவருடைய நீண்ட வாழ்விலே அவர் தெரிவு செய்து கொண்ட பாதை அரசியல்பாதை, நான் தெரிவு செய்த பாதை குருப் பாதை.

ஆனால் இருவரும் இரண்டு வழியிலே சென்றாலும், மக்களை மையப்படுத்தி, மக்களுக்காக, மக்கள் விடுதலைக்காக குரல் கொடுக்கும் ஆள்களாக இருப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இன்று எங்களுடைய போராட்டம் நாட்டுக்குள்ளே மாத்திரமல்ல, கட்சிகளுக்குள்ளே மாத்திரமல்ல, பன்னாட்டு மயமாக்கப்பட்ட போராட்டம்.

அதன் முக்கியத்துவத்தை தலைவரே எடுத்துக் கூறியிருந்தார். நானும் சம்பந்தனும் கிட்டத்தட்ட ஒரே வயதுடையவர்கள் இருந்தாலும் எங்களுடைய வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்கள் அவர்களுக்கு இருக்கும் வாக்குகளைப் பாவித்து அந்தந்த அரசுகளுடன் தொடர்பு கொண்டு நாங்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

ஏனென்றால் இலங்கைக்குள் இருக்கும் அரசியல்வாதிகளிடம் நாங்கள் நம்பிக்கை வைத்தால் போதாது எங்களைப் பலமாக்கி எங்களை ஒன்று படுத்தி நாங்கள் முன்னேற வேண்டும். ஒன்றரை வருடமாக மைத்திரிபால சிறிசேன அதிகாரத்துக்கு வந்தபின்பு என்னை அழைத்து நாட்டுக்கு வரும்படி கேட்டிருந்தார். அதன்படி வந்துவிட்டேன்.

ஆனால் அண்மைக் காலங்களிலே அவர் போடும் குத்துக்கரணங்களை நான் அவதானித்து வருகிறேன். அதை விமர்சித்தும் வருகிறேன். அவருக்கும் நேரில் நான் கூறியிருக்கிறேன்.

ஆகையால் தான் எங்களுடைய மக்கள் போராட்டத்தை தொடர்வதாக இருந்தால் சிலகருத்துக்களை தெரிவிக்க விரும்புகி றேன்.

எங்களுடைய மக்கள் சார்பாக இதைக் கூறுகிறேன். இது உங்களுக்கு இறுக்கமாக இருக்கும். ஆனால் நான் கண்டதை, கேட்டதை, அதற்குச் சாட்சியமளிக்கும் எனது பணியிலே கூறுகின்றேன்.

### விழுமியங்களை மீளெடுக்க ஒன்றுசேரவேண்டும்

21 வருடங்களின் பின்னர் நான் நாடு திரும்பினேன். இந்தப் போரினூடாகச் சென்ற நீங்கள் உயிரிழப்புக்கள், பொருள் இழப்புக்கள், காணியிழப்புக்கள் எல்லாம் அடைந்து, அழிவுகளைச் சந்தித்துள்ளீர்கள். சிலவற்றை மாத்திரம் மீளெடுக்க நாங்கள் சிந்திக் கின்றோம். அதிலே ஒரு பகுதி வெற்றியடையலாம். ஆனால் நான் பார்த்துக்கொண்டு, அனுபவித்துக்கொண்டிருந்து நான் கண்ணீர்விடும் காரியம் என்னவென்றால், எங்களுடைய இனம் எங்களுடைய மக்கள், குறிப்பாக இளையோர்கள் காணமுடியாத பெறுமதிகளை, விழுமியங்களை இழந்தவர்களாக கண்தெரியாதவர்போல ஒழுக்கமற்ற, முறையற்ற சமூகமாக மாற்றியிருக்கிறார்கள்.

இதைநான் குறைகூறுவதற்காக அல்ல கண்ணீர்விட்டுக் கூறுகின்றேன். தென்பகுதியிலே இருக்கும் மக்களைப் பார்க்கும்போது அல்லது தென்னிந்தியாவில் இருக்கும் மக்களைப் பார்க்கும் போதும் நீங்கள் எவ்வளவோ இழப்புக்களைச் சந்தித்து வந்திருக்கிறீர்கள். இன்றைக்குப் பெற்றோர்களுக்கும் தெரியாது, இங்கிருக்கும் தலைவர்கள், ஆசிரியர்களுக்கும் தெரியாது நாங்கள் காணமுடியாத விழுமியங்களை இழந்திருக்கிறோம் என்பது. அது மிகவும் கஸ்ரமானது. அதை மீளவும் தேடி எடுக்க மதத்தலைவர்கள், கல்வி அமைப்புக்கள், சமூக அமைப்புக்கள் முன்வரவேண்டும்.

அரசியல் தலைவர்கள் மாத்திரமல்ல தமிழ்ச் சமூக அமைப்புக்கள் முன்வந்து இந்த விழுமியங்களைக் கட்டியெழுப்புவதிலே கைகோர்க்க வேண்டும் என்று வேண்டுகின்றேன்.

### ஒன்றுசேர வேண்டும்

இன்றைக்கு நாங்கள் எங்களுடைய அடிப்படைத் தொடர்புகளை இழந்துகொண்டிருக்கிறோம். நாங்கள் எங்களுடைய இருக்கும் உரிமையை பாதுகாக்கவேண்டும். அரசியல் உரிமையை மனித உரிமைகளைக் காட்டிலும், இருக்கும் உரிமையைப் பாதுகாக்க வேண்டும். அதை இழக்கின்ற சமயங்களில் நாங்கள் ஒன்று சேர்ந்து அந்த உரிமைக்காகப் போராடவேண்டும்.

### தெய்வீகப் பற்று இருக்க வேண்டும்

தலைவர் சம்பந்தன் குறிப்பிட்டது போல, நாங்கள் நீண்ட போராட்டத்திலே பல ஏமாற்றங்களை அடைந்திருக்கிறோம். நாங்கள் ஒரு இலட்சியத்தைப் பின்பற்றுகிற போது அந்த இலட்சியத்தில் எங்களுக்கு தெய்வீகப் பற்று இருக்க வேண்டும். அர்ப்பணிப்பு இருக்க வேண்டும். எங்களுடைய அவலங்கள் வெல்ல வேண்டுமானால் இவை முக்கியமானவை. எங்களுடைய பாடல்களிலே தமிழ் வாழ வேண்டும் என்று வந்தால் தமிழ் இனம் வாழவேண்டும் என்றும் பாட வேண்டும்.

### அர்ப்பணிப்புடன் இருந்தால் வெற்றியை இறைவன் தருவான்

எமக்குள் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபடுவோம்.

தந்தை செல்வநாயகம் 76ஆம் ஆண்டிலே இறைவன் தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னார். இன்று சம்பந்தன் தனது பேச்சு முடிவிலே இறைவனைக் கூப்பிட்டார். நானும் ஒரு குரு என்ற ரீதியிலே கூறு கின்றேன்.

தமிழர் உண்மை, நீதியின் அடிப்படையிலே போராட்டத்தை முன்னெடுப்பார்களாக இருந்தால் நிச்சயமாக அவர்களுக்கு அந்த இறைவன் இன்று இல்லாவிட்டாலும், நாளை வெற்றியைக் கொடுத்தே தீருவான். ஆகையால் எங்களுடைய போராட்டத்தை நாங்கள் மதித்து அர்ப்பணித்து, அதிலே ஒழுங்காகப் பங்கெடுக்க வேண்டும்.

### சுயவிமர்சனம் செய்யுங்கள்

தமிழர்களிடமுள்ள பலவீனங்களையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அடிக்கடி நாம் கூறும் வார்த்தை தமிழர்கள் சுய விமர்சனம் செய்யமாட்டார்கள்.

நாங்கள் என்றைக்கு சுய விமர்சனம் செய்து நாங்கள் எல்லோரும் ஒரே தாயின் பிள்ளைகள், சமத்துவமான, சகோதரத்துவமானவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு நாங்கள் எங்களுக்குள்ளே சுதந்திரத்தைப் பகிர்ந்து கொள்கின்றோமோ, மதிக்கின்றோமோ அன்றுதான் எங்களுடைய விடுதலையும் வரும்.

நாங்கள் இங்கிருந்து ஜெனிவாவுக்குச் சென்று தமிழர்களுடைய உரிம்மையைக் கேட்கும் போது, எமது ஊரிலே, எமது நாட்டிலே என்னுடைய சகோதர தமிழருக்கு உரிமை கொடுக்கின்றேனா என்று முதலிலே நாங்கள் கேட்க வேண்டும்.

பெரியாருடைய கோட்பாட்டைப் பின்பற்றி சாதி வேறுபாடுகளை, சமய வேறுபாடுகளைக் களைந்து இவைகளை விட்டு உண்மையிலேயே நாங்கள் சமத்துவத்திலே வாழ்ந்து போராடினால்தான் எங்களுக்கும் உரிமை இருக்கிறது. இறைவனும் எம்மை ஏற்பான் என்றார். (து-21)



தமிழ் அரசுக் கட்சியின் 16ஆவது பேராளர் மாநாட்டில் தமிழர் பேரவையின் தலைவர் இமானுவேல் எழுதிய இரண்டு நூல்களும் வெளியிடப்பட்டபோது....



## வர்த்தகத்தை விருத்திசெய்ய முன்னாள் போராளிக்கு நிதி

கிளிநொச்சி, ஜூலை 2
முல்லைத்தீவு, வற்றாப்பளையைச் சேர்ந்த முன்னாள் போராளி ஞானதாஸ் ஜீட் பிரசாந்துக்கு கிளிநொச்சியிலுள்ள கல்வி, பொருளாதார அபிவிருத்தி அமைப்பு ஒரு இலட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.
அவர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உதவியாக இந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
இந்த நிதியை கனடா, ரொரன்ரோ நகரில் வதியும் தேவபாலன் கஜேந்தினி குடும்பத்தினர் கொடுத்திருந்தனர். (த-222)

## வீதி சீரமைப்பு பணி ஆரம்பம்

கொடிகாமம், ஜூலை 2
யாழ்ப்பாணம் மானிப்பாய் ஐந்தாம் கட்டை ஒழுங்கையின் சீரமைப்புப் பணிகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.
நீண்டகாலமாக இந்தப் பாதை சீரமைக்கப்படாமையால் மக்கள் போக்குவரத்துக்கு செய்வதற்கு மிகவும் சிரமமடைந்தனர்.
இதனையடுத்து கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனால் 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு பாதையின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்ப நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி தென்மேற்கு பிரதேச சபையின் உபதவிசாளர் கணேசவேல், முன்னாள் ஆசிரியர் செல்வராஜா மற்றும் ஊர்மக்கள் நலன்விரும்பிகள் என பலர் கலந்துகொண்டனர். (ஐ-159)

## வருடாந்த பெருந்திருவிழா

சாவகச்சேரி, ஜூலை 2
யாழ்ப்பாணம் சாவகச்சேரி பெருங்குளம் சிறி அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 7 ஆம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 15ஆம்திகதிதிங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-9)

போர்க்குற்றச்சாட்டுக்குள்ளான

# 56ஆவது படைப்பிரிவு நடத்தும் இன்னிசை நிகழ்வுக்கு எதிர்ப்பு

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம்

வவுனியா, ஜூலை 2

இலங்கை இராணுவத்தின் 56ஆவது படைப்பிரிவின் மீது போர்க் குற்றச்சாட்டுகள் உள்ள நிலையில். அந்தப் படைப்பிரிவு எதிர்வரும் சனிக்கிழமை நடத்தும் இன்னிசை நிகழ்வுக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்த நிகழ்ச்சியை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். அன்றையதினம் எதிர்ப்புப் போராட்டமும் நடத்தவுள்ளோம் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வவுனியா உறவுகள் தெரிவித்துள்ளனர்.

உறவுகளின் சங்கச் செயலர் கே. ராஜ்குமார் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவங்களையடுத்து ஏற்பட்ட நிலமையில் இருந்து மக்களை மீட்டு இயல்பு நிலைக்குத் திருப்பவும், இனங்களுக்கிடையேயான பிளவுகளைக் களையவும் வவுனியா வாழ் மக்களை மனதளவில் மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கிலும் இசை நிகழ்ச்சியை நடத்தவுள்ளோம் என்று இராணுவத்தின் 56ஆவது படைப்பிரிவு கூறி யுள்ளது. வவுனியா நகரசபை திறந்த மைதானத்தில் நடக்கவுள்ள இந்த நிகழ்வை வவுனியா வர்த்தகர் சங்கம், வவுனியா முஸ்லிம் பள்ளிவாசல்களுடன் இணைந்து நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதை நாங்கள் எதிர்க்கிறோம். நாங்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்திக்கொண்டிருப்பதற்கு 56ஆவது படைப்பிரிவும் காரணம்.
இந்த வருடம் பெரியவெள்ளிக்கிழமை வவுனியா வர்த்தகர் சங்கத்தினர், தென்னிந்திய இசைக்கலைஞர்களை அழைத்துவந்து அன்னை பூபதி நினைவு தினத்தில் நகரசபை கலாசார மண்டபத்தில் நிகழ்ச்சி என்று ஒன்றை நடத்தியிருந்தனர். அதற்கும் நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தோம்.
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குமாறு வர்த்தகர் சங்கத்திடம் முன்னர் வழங்கிய கடிதத்தையும் மீளப் பெற்றுக் கொண்டுள்ளோம்.
இந்த நிலையில், படையினர் ஒரு இன்னிசை நிகழ்ச்சியை நடத்தவுள்ளனர். வர்த்தக சங்கத்தினரைப் பார்த்துத்தான் படையினரும் இப்போது இந்த நிகழ்வை ஒழுங்கு செய்யத் தொடங்கியுள்ளனர்.
எனவே அன்றைய தினம் கவனயீர்ப்புப் போராட்டம் நட்த்தி எமது எதிர்ப்பைத் தெரிவிக்கவுள்ளோம் என்றார். வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியா நகரசபை மைதானத்துக்கு அருகில் சுழற்சி முறையில் நீண்ட காலமாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (த)




பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவிக்கு ஈருருளி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அமரர்களான வைகுந்தவாசன், ஸ்ரீஸ்கந்தராஜா, விஜயகாந்தன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக காந்தமலர் மற்றும் சந்திரமலர் ஆகியோரின் நிதியுதவியில் யாழ்ப்பாணக் கல்வி வலய உடற்கல்வி சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் முருகதாஸ் அதை வழங்கியிருந்தார். (த-422)

## இலவசக் கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

சாவகச்சேரி, ஜூலை 2
இலவச கண் பரிசோதனையும்,பார்வையில் குறைபாடு உள்ளவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.
எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதி சக்தியம்மன் தமிழ் வித்தியாலயத்தில் காலை 8. மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் நிகழ்வில் கோயிற்குடியிருப்பு சாவகச்சேரி நகரம், சங்கத்தானை ஆகிய கிராம அலுவலர் பிரிவு மக்கள் கலந்து கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த திருமதி யசோதை சபாரத்தினத்தின் நினைவாக அவரது குடும்பத்தினரால் வழங்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் பரிசோதனையின் போது பார்வையில் குறைபாடு உள்ளவர்களுக்கு வழங்கப்படவுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
கண் பரிசோதனையில் பங்குபற்ற விரும்புவோர் சங்கத்தானை உப அஞ்சல் அலுவலகக் கட்டடத்தில் இயங்கும் கழக அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-9)

## உளவளப் பயிற்சி பெற்றவர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான உதவிகள்

மன்னார், ஜூலை 2
உளவளத்துணை அமர்வுகளை நிறைவு செய்தவர்ளுக்கு சுயதொழில்முயற்சிக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. போர் மற்றும் கட்டமைக்கப்பட்ட வன்முறைகளால் மனவடுவுக்கு முகங்கொடுத்தவர்களை சமூகத்துடன் மீளிணைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக அமர்வு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையின் நிதி அனுசரணையில், குடும்ப மறுவாழ்வு நிலையத்தால் வழங்கப்பட்ட உளவளத் துணை அமர்வுகள் நடத்தப்பட்டன.
பயனாளிகளுக்கான சிறுதொழில் முயற்சிக்கு உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. மன்னார் குடும்ப மறுவாழ்வு நிலையத்தால் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இதில் முதன்மை விருந்தினராக மாந்தை மேற்கு பிரதேச செயலர் கேதீஸ்வரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தி னர்களாக நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை நிறுவன அலுவலர்கள் கலந்து கொண்டிருந்தனர். மனவடுவுக்கு முகங்கொடுத்தோர் தம்மீதான நம்பிக்கையைத் தொடர்ச்சியாகப் பேணுவதுடன், குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் தம்மாலான பங்களிப்பை வழங்க ஊக்குவித்து, சமூகத்துடன் மீளிணைக்கும் நோக்கிலேயே இந்தச் சிறு சுயதொழில் முயற்சிக்கான உதவி வழங்கப்பட்டது என்று கூறப்பட்டது. (த-21)



மன்னார் முருங்கன் புதுக்குடியிருப்பு ஸ்ரீமுருகன் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா சிறப்பாக நடைபெற்று நிறைவடைந்தது. பத்து நாள்கள் அலங்காரத் திருவிழா கடந்த இருபதாம் திகதி ஆரம்பமாகி கடந்த இருபத்தொன்பது சனிக்கிழமை நிறைவு பெற்றது. (த-213)

# மன்னாரில் நல்லிணக்கச் செயற்பாடுகள் இந்துக்களுக்கு நன்மை பயக்கவில்லை!

## மன்னார் இந்துக் குருக்கள் பேரவை தெரிவிப்பு

தலைமன்னார், ஜூலை 2

நாங்கள் சமாதானம் சமாதானம் என்று மன்னார் மாவட்டத்தில் பேசிக் கொண்டிருக்கின்றோம். நல்லிணக்கச் செயற்பாடுகளூடாகச் சென்று கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்த நல்லிணக்கச் செயற்பாடு மன்னார் மாவட்ட இந்து மக்களுக்கு எந்தவித நன்மையும் பயக்கவில்லை என்பதே எங்களுக்குக் கவலையாகவுள்ளது.



இவ்வாறு மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவைத் தலைவர் சிவசிறி மகா.தர்மகுமாரக் குருக்கள் தெரிவித்தார்.

அந்த அமைப்பு கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருக்கேதீச்சர கோவில் வீதி அலங்கார வளைவு அனுமதி, பல்வேறு கால இழுத்தடிப்புக்குப் பின்னர் பிரதேச சபையால் எமக்கு உத்தியோக பூர்வமான கடிதம் ஒன்றின் மூலமாக வழங்கப்பட்டது. சில தினங்களுக்கு பின்னர் அனுமதி இடைநிறுத்தப்படுவதாக மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் ஒப்பமிட்டு மீண்டும் எங்களுக்கு ஒரு கடிதம் அனுப்புகிறார்.

இது இந்து சமய மக்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏமாற்றம் மட்டுமல்ல கவலையையும் எற்படுத்தியுள்ளது. இதற்குக் காரணம் தவிசாளருக்கு பல தரப்பட்ட அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாக நாங்கள் அறிகின்றோம். இந்த வளைவு சம்பந்தமாக நாங்கள் சமாதானப் பேச்சு முன்னெடுத்துச் செல்வதற்காக பல தடவைகள் முயற்சிகள் மேற்கொண்டோம்.

ஒரு பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நல்லெண்ண சமிக்ஞைகளை நாங்கள் காட்டியிருந்தோம். ஆனால் நாங்கள் சந்தித்த அமைப்புக்கள் மன்னார் ஆயருடன் சந்திப்பதற்கு எடுத்த முயற்சிகள் கைகூடாமல் போய்விட்டன. அது துரதிஷ்டமானது.

நாங்கள் சமாதானம் சமாதானம் என்று மன்னார் மாவட்டத்தில் பேசிக் கொண்டிருக்கின்றோம். அத்துடன் நல்லிணக்க செயற்பாடுகளுக்கூடாகச் சென்று கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்த நல்லிணக்க செயற்பாடு மன்னார் மாவட்ட இந்து மக்களுக்கு எந்தவித நன்மையும் பயக்கவில்லை என்பதே எங்களுக்குக் கவலையைக் கொடுக்கின்றது.

மன்னார் திருக்கேதீச்சர வளைவு உடைப்பின் பின் சர்வமத பேரவையிலிருந்தும் சர்வமத செயற்பாட்டிலிருந்தும் இந்துக் குருமார் பேரவை வெளியேறுவதாகத் தெரிவித்திருந்தோம். ஆனால் நாட்டிலிருந்த பிரச்சினை காரணமாக நாங்கள் குரல் கொடுக்க வேண்டும் என்பதற்காக சில விடயங்களில் நாங்கள் இணைந்திருந்தோம். ஆனால் இந்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு எவரும் முன்வருவது கிடையாது. மன்னார் சர்வமதப் பேரவையும் இந்த விடயத்தில் அக்கறையின்மை காட்டி வருவதை உணர்கின்றோம். மன்னார் மாவட்டத்தில் இந்துக்கள் நசுக்கப்பட்டு வருகின்றார்கள்.

### ஒரு சிலரே எதிர்க்கின்றனர்

இந்து மக்கள் நசுக்கப்படுகின்றமைக்காக இங்குள்ள கத்தோலிக்க மக்கள் அனைவரையும் நாங்கள் குறை கூறவில்லை. அதிகமான கத்தோலிக்க மக்கள் திருக்கேதீச்சர கோவிலுக்குச் செல்லும் வீதியில் அலங்கார வளைவு அமைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் ஒரு சிலரும் ஒரு சமூகமும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றபோது ஆயர் இல்லமும் எமக்கு நல்ல சமிக்ஞையைக் காட்டவில்லை. ஆயர் இல்லத்துடன் நாங்கள் கலந்துரையாடி நல்ல இணக்கப்பாடு நல்லதொரு சமரசத்தை எட்டலாம் என்று எண்ணி வருகின்றபோதும் அது பயனளிக்கவில்லை. இந்த விடயத்தைப் பேசித் தீர்ப்பதன் மூலம் நல்லதொரு இணக்கப்பாட்டை எட்டலாம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

### திட்டமிட்ட செயற்பாடுகள்

மன்னார் மாவட்டத்தில் இந்து மக்கள் பல வருடங்களாக விட்டுக் கொடுப்புடனேயே வாழ்ந்து வருகின்றோம். இப்படியிருக்க இது ஏன் திட்டமிட்டு நடக்கின்றது? பின் புலத்தில் யார் இருக்கின்றார்கள்? என்பது எங்களுக்குப் புரியவில்லை.

### அமைதியாக இருந்தால் கையாலாகாதவர்களல்ல!

நாங்கள் அமைதியாக இருக்கின்றோம், சமாதானமாக இருக்கின்றோம் சமாதானக் கதவை திறந்து வைத்திருக்கின்றோம் என்று நினைத்து நாங்கள் பயந்தவர்கள், கையாலாகாதவர்கள் என்பதல்ல. தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் மறுமடியும் தர்மம் வெல்லும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. அதுஎங்களுக்கு இருக்கின்றது.

### வளைவு அமைக்கும்வரை நிகழ்வுகளில் பங்கேற்கோம்

எனவே திருக்கேதீச்சர வளைவு அமைக்கும் வரை நாங்கள் சில அமைப்புக்கள், கத்தோலிக்கம் சார்பாக அவர்களால் ஏற்படுத்தப்படுகின்ற சகல நிகழ்வுகளையும் நாங்கள் இன்று தொடக்கம் புறக்கணிப்பதாகத் தீர்மானித்துள்ளோம். இது அவர்களுக்கு விளங்க வேண்டும்.

சமாதானம் சக வாழ்வு என்று பேசிக் கொள்ளுகின்றார்கள். அனால் எவ்வித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. சர்வமதப் பேரவை இதுவரை இந்துக் குருமார் பேரவையுடன் உத்தியோக பூர்வமான முறையில் சந்திக்கவில்லை. அரச, அரசு சார்பற்ற நிறுவனங்களைத் தவிர்ந்த ஏனைய மதம் சார்ந்த கூட்டங்களை நாங்கள் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளோம். ஆகவே மறுக்கப்பட்ட அனுமதிக்கு நாங்கள் கடுமையான வேதனைகளையும் கவலைகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### பக்கச்சார்பாக நடவடிக்கை

புதிதாக ஆலயம் கட்டுவதென்றால் அல்லது சொரூபங்கள் வைக்கப்பட வேண்டுமானால் அல்லது வளைவுகள் கட்டப்பட வேண்டுமானால் வெறுமனே கட்டப்படக் கூடாது எனவும் அதற்கான அனுமதி பெற்றிருக்க வேண்டும் எனவும் மாவட்டச் செயலகத்திலே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு அனுமதி பெறப்பட்ட வளைவு நிறுத்தப்படுகிறது. ஆனால் சட்டபூர்வமற்ற சொரூபங்கள் வைக்கும் செயல்பாடுகள் நடைபெறுகின்றன. அவற்றுக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

இவ்வித செயற்பாடுகள் நடைபெறுகின்றபோதும் நாங்கள் எந்தவித எதிர்ப்புக்களும் தெரிவிப்பதில்லை. மாந்தையில் லூர்து மாதா ஆலயம் கூட எவ்வித அனுமதியின்றியே கட்டப்பட்டுள்ளது.

இந்த ஆலயம் ஒரு குகையாகக் கட்டப்பட்ட நிலையில் இப்பொழுது இந்து மக்களின் எவ்வித எதிர்ப்பும் இன்றி பெரிதாக கட்டப்பட்ட ஆலயத்தை திருக்கேதீச்சர வளைவு மறைக்கும் என்று தெரிவிக்கின்றனர்.

ஆகவே இந்த வளைவு ஆலயத்தை மறைக்கும் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார்.

இந்தச் சந்திப்பில், மன்னார் மாவட்ட இந்துக் குருமார் பேரவையின் உப தலைவர் சிவசிறி.தியாக.கருணானந்தக் குருக்கள், செயலர் சிவசிறி.மனோ ஐங்கரசர்மா, பொருளாளர் சிவசிறி. ஸ்ரீஜயபாபு குருக்கள் மற்றும் உறுப்பினர் சிறி.கரி சர்மா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-60)



யாழ்ப்பாணம், கச்சாய் மகா வித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தால் இந்த உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நூலகக் கண்காட்சி

கொடிகாமம், ஜூலை 2

யாழ்ப்பாணம், வரணி மத்திய கல்லூரியின் நூலகக் கண்காட்சி கல்லூரி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் பி.செல்வவிநாயகம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டனர். (ஐ-159)



# 51 கிலோ பீடி இலைகள் நயினாதீவில் மீட்கப்பட்டன



யாழ்ப்பாணம், ஜூலை 2

மன்னாருக்குக் கடத்தப்படும் பீடி இலைகள் மீட்கப்பட்டுவரும் நிலையில், யாழ்ப்பாணக் கடற் பரப்பில் பீடி இலைகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது.

யாழ்ப்பாணம், நயினாதீவு வடக்கில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில், வடக்குக் கடற்படை கட்டளைக்கு இணைக்கப்பட்ட கடற்படையினர் 51 கிலோ கிராம் பீடி இலைகளை மீட்டுள்ளனர். அவை மேலதிக விசாரணைகளுக்காக சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. மன்னார் கடற் பரப்புக்களில் பீடி இலைகள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றன. இதுவரை சுமார் 10 ஆயிரம் கிலோகிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

# அரசதலைவர் தேர்தல் தொடர்பில் மக்களின் விருப்பமே எம் முடிவு

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 2

அரசதலைவர் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து மக்களின் முடிவின் பின்னரே எமது முடிவு என்று நாடாளுமன்றக் கூழக்களின் பிரதித் தலைவரும், வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களைப் பொறுத்தவரை கடந்த இரண்டு அரசதலைவர் தேர்தல்களும் மக்கள் முடிவெடுத்த பின்புதான் நாங்கள் அந்த முடிவுக்குத் தள்ளப்பட்டோம். அதேபோல்தான் அடுத்தஅரசதலைவர் குறித்தும் மக்கள் ஒரு முடிவுக்கு வருவார்கள். அதன்பின் நாம் சரியான முடிவை எடுக்க முடியும். இப்பொழுது தென்னிலங்கையில் இருக்கின்ற சிங்களக் கட்சிகள் யாரை வேட்பாளராக நியமிப்பது என்ற பிரச்சினையில் உள்ளன. அதன் பின் மக்கள் எடுக்கின்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே எங்களின் முடிவுகள் அமையும். பொறுத்திருந்து மக்களுடைய செயற்பாட்டுடன் ஒத்துப்போகின்ற ஒரு முடிவையே நாம் எடுப்போம்- என்றார். (த)

# மண்டைதீவில் அமைந்தது கடற்கரை சுற்றுலா மையம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
மண்டைதீவுப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் கடற்கரைச் சுற்றுலா மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறை அமைச்சின் 7.5 கோடி ரூபா நிதி உதவியில் இந்தச் சுற்றுலா மையம் நிறுவப்பட்டுள்ளது.



வேலணை பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையினரால் மேற்படி சுற்றுலா மையம் மக்கள் பாவனைக்காக நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.
படகுச்சவாரி உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக இந்த கடற்கரை சுற்றுலா மையம் அமைந்துள்ளது. மாலை 4 மணி முதல் 6.30 மணிவரை இந்தப் படகுச் சவாரியை மக்கள் பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
2016ஆம் ஆண்டு மண்டைதீவுப் பகுதியில் சுற்றுலா மையம் ஒன்றை அமைக்கவும் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் நோக்கிலும் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இந்தச் சுற்றுலா மையம் அமைப்பதில் பல்வேறு மாற்றுக் கருத்துக்கள் இருந்துவரும் நிலையில் தற்போது இது திறந்து வைக்கப்பட்டுள்ளது.
5 கோடி ரூபாவில் சுற்றுலா மையம் அமைக்கப்படும் முன்னமே ஆள் நடமாட்டம் அற்ற வீதியைச் சீரமைப்புச் செய்து 10க்கு10 இடைவெளியில் சோலர் விளக்குகள் பொருத்த 18 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.
சுற்றுலா மையம் அமைக்கப்படும் முன்னமே 26 மில்லியன் ரூபாவுக்கு படகுகள் கொள்வனவு செய்யப்பட்டன. அவை பாதுகாப்பாக வைக்கப்படாமல் இதுவரை காலமும் வெயிலிலும் மழையிலும் காணப்பட்டது. சபையின் உறுப்பினர்களின் கடுமையான வலியுறுத்தலின் பின்னர் அவை சபை நிதியில் பாதுகாக்கப்பட்டன. இப்படியான பல்வேறு சர்ச்சைகள் மற்றும் குழப்பங்களுக்கு மத்தியில் படகுச் சவாரியை மட்டும் மையப்படுத்தி இந்தச் சுற்றுலா மையம் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ம-7)



## மரம் நடும் நிகழ்வு

கொடிகாமம், ஜூலை 2
கல்வயல் சின்ன இல்வாரை குளத்தை சூழ மரம் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
சாவகச்சேரி றோயல் கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் பசுமைச்சுவடுகள் அமைப்பினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்பபீட பீடாதிபதி கலாநிதி சிவமதி சிவச்சந்திரன், விரிவுரையாளர் ஜெயபாலன், விவசாயபீட வனவியற்கழக மாணவர்கள், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.கஜேன் மற்றும் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ-159)

## செயலர்கள் கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 2
வடக்கு மாகாண ஆளுநரின் செயலராக எஸ்.சத்தியசீலனும், கல்வி அமைச்சின் செயலராக இ.இளங்கோவனும் நேற்று உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.
கல்வி அமைச்சின் செயலராகக் கடமையாற்றிய எஸ்.சத்தியசீலன் ஆளுநரின் செயலராகவும், ஆளுநரின் செயலராகக் கடமையாற்றிய இளங்கோவன் கல்வி அமைச்சின் செயலராக கடந்தவாரம் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்.
இவர்கள் இருவரும் நேற்று உத்தியோக பூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுகொண்டனர். (ஐ-7)

## யாழ்ப்பாண வணிகர் கழக புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 2
யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை வணிகர் கழக பணிமனையில் நடைபெற்றது. வணிகர் கழக தலைவராக இ.ஜனக்குமார், உபதலைவராக இ.ஜெயசேகரன், செயலாராக சி.கேசவன், உப செயலராக ச.சிவ லோகேசன், பொருளாளராக சு.தினேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் 14 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகியுள்ளனர் என்று கழகம் அறிவித்துள்ளது. (ம-7)

## கொடிகாமம் அரசினர் வித்தியில் மாதிரிச் சந்தை

கொடிகாமம், ஜூலை 2
கொடிகாமம் அரசினர் வித்தி யாலயத்தின் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான மாதிரிச் சந்தை இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.
காலை 8.30 மணியிலிருந்து முற்பகல் 10 மணிவரை அதிபர் ப.தர்மபூபதி தலைமையில் இது நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)



## தரணிக்குளத்திலிருந்து வவுனியாவுக்கு தினமும் 3 தடவைகள் பேருந்து சேவை

### நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது

வவுனியா, ஜூலை 2
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்குட்பட்ட தரணிக்குளம் புதிய நகருக்குப் பேருந்து சேவை நேற்று முற்பகல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிரிவு கிராம அலுவலர் திவ்யப்பிரியா நாடா வெட்டி பேருந்து சேவையை ஆரம்பித்து வைத்தார்.
2003ஆம் ஆண்டு தரணிக்குளம் புதிய நகரில் குடும்பங்கள் குடியேற்றம் செய்யப்பட்டன. தற்போது அந்தக் கிராமத்தில் 188 குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான போக்குவரத்து சேவையின்றி 16 வருடங்களாக அந்தக் கிராம மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.
நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் தரணிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்துக்கு விடுத்த கோரிக்கையை அடுத்து, கிராம மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு தரணிக்குளம் புதிய நகருக்கான பேருந்து சேவையை வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் ஏற்பாடு செய்தது. இதன் அடிப்படையில் தினசரி மூன்று சேவைகளை தனியார்பேருந்துகள் நடத்தவுள்ளன.
கிடாச்சூரி பகுதியிலிருந்து காலை 5.50, முற்பகல் 10.10, பிற்பகல் 4.45 மணிக்கு ஆரம்பமாகும் சேவைகள் தரணிக்குளம் புதிய நகருக்குச் சென்று பயணிகளை ஏற்றிக்கொண்டு வவுனியா நோக்கி பயணிக்கும் வவுனியாவிலிருந்துமுற்பகல் 10.00, மதியம் 1.10, பிற்பகல் 5.25 மணிக்கு ஆரம்பமாகும் சேவைகள் தரணிக்குளம் புதிய நகர் நோக்கி பயணிக்கும் என வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் எஸ்.இராஜேஸ்வரன் கூறினார் என்று அந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர்.
தரணிக்குளம் புதிய நகருக்கான பேருந்து சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர், செயலர், உறுப்பினர்கள், கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (த)

## விருது வழங்கி மதிப்பளிப்பு



தென்மராட்சி, ஜூலை 2
யாழ்ப்பாணம், உடுவில் குபேரகா கலை மன்றத்தினர் வரணி குருக்கள் குடியிருப்பைச் சேர்ந்த திருமதி சிவசுப்பிரமணியம் நாகம்மாவுக்கு வட ஜோதி என்னும் விருதை வழங்கி மதிப்பளித்துள்ளனர்.
இலங்கை நாட்டின் வடபுல மண்ணில் கலை, பண்பாடு, கலாசாரம் விளையாட்டு மற்றும் சமூக வளர்ச்சிக்காகவும் இனம், மொழி, சமயபேதம் கடந்து வட மாகாண ரீதியாக சேவையாற்றிவரும் மக்கள் நலன் பேணும் துறைசார் சாதனைப் பெண்களின் சேவைகளை மதிப்பளிக்கும் வகையில் அண்மையில் தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் வாழும் போதே வாழ்த்துவோம் என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## வாழ்வாதார உதவி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
மாவீரர் குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக ஒரு லட்சத்து இருபது ஆயிரம் ரூபா பெறுமதியான 10 ஆடுகள் வழங்கிவைக்கப்பட்டன. தூய கரங்கள் தொண்டு நிறுவனத்தின் ஊடக புலம் பெயர்ந்த தமிழர் ஆஸ்திரேலியாவை சேர்ந்த சத்தியசீலனின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவி வழங்கப்பட்டது. புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இரத்தினவடிவேலால் கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது. (ஐ-ரி3)

# கல்முனை வடக்கைத் தரமுயர்த்தினால் முஸ்லிம்களின் பொருளாதாரம் விழும்

## நாடாளுமன்ற உறுப்பினர் மன்சூர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 2

கல்முனை வடக்கு தமிழ் உபபிரதேச செயலகத்தை தரமுயர்த்துவது, கல்முனை முஸ்லிம்களின் பொருளாதாரத்தை கேள்விக் குறியாக்குமென திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவது தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டமொன்று சம்மாந்துறை பத்ஜும்ஆப்பள்ளிவாசலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். முஸ்லிம்களுக்கு எதிரான அநீதிகளுக்கு தீர்வு வழங்காமல், பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவது கல்முனையில் பெரும்பான்மையாக வாழும் முஸ்லிம்களுக்கு பெரிய இழப்பை ஏற்படுத்தும். தென்கிழக்கின் முகவெற்றிலை கல்முனையாகும். முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வர்த்தக பூமியாகவும் இது திகழ்கிறது. இதனை விட்டுக்கொடுக்க முடியாது. இந்த விவகாரத்தை முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினைகளுள் ஒன்றாகக் கொண்டுசென்று நியாயமாகத் தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

கடைசி சந்தேகநபரும் இறந்ததை அடுத்து

# கதிர்காமர் கொலை வழக்கு ஒருவாறு முடிவுக்கு வந்தது

கொழும்பு, ஜூலை 2

இலங்கையின் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதாக கொழும்பு மேல்நீதிமன்றம் அறிவித்தது. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த சந்தேகநபர்கள் அனைவரும் இறந்துவிட்ட நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கதிர்காமர் கொலை வழக்கில் கடந்த 14 ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான முத்தையா சகாதேவன் (வயது -62) என்பவர், கடந்த மாதம் 22ஆம் திகதி கொழும்பு தேசிய மருத்துவமனையில் உயிரிழந்தார். இதையடுத்தே மேற்படி வழக்கு முடிவுக்கு வந்தது என்று மேல் நீதிமன்றம் அறிவித்தது.

2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

10 ஆயிரம் பிக்குகளை திரட்டும் விவகாரம்

# நாட்டைச் சீர்குலைக்க துடிக்கிறார் ஞானசாரர்

## அப்துல்லா மகரூப் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 2

நாட்டைச் சீர்குலைப்பதற்காகவே ஞானசார தேரர் ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்கட்சியின் தேசிய அமைப்பாளருமான அப்துல்லா மகரூப்.

பொதுபலசேனா அமைப்பு கண்டியில் எதிர்வரும் 7ஆம் திகதி மிகப்பெரும் ஆர்ப்பாட்டமொன்றைநடத்த அழைப்பு விடுத்துள்ளது. ஒரு லட்சம் பொதுமக்களையும், 10 ஆயிரம் பிக்குகளையும் இந்த ஆர்ப்பாட்டத்துக்காக பொதுபலசேனா அமைப்பு திரட்டி வருகிறது. இது தொடர்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே மகரூப் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது அமைச்சர்களும், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களும், கடந்த மூன்றாம் திகதி பதவி விலகியபோது இந்த அரசுக்கு பல நிபந்தனைகளை விதித்தோம். முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, மதரஸாக்களை பாதுகாப்பது, அப்பாவி உலமாக்களை, கைது செய்யப்பட்டவர்களை விடுப்பது மற்றும் முஸ்லிம் பெண்களின் ஆடைகளுக்கு சட்ட அங்கீகாரம் வழங்குவது என்பன அவை. முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அன்று பதவி விலகியிருக்கா விட்டால் இந்த நாட்டில் பெரிய இனக் கலவரம் ஏற்பட்டிருக்கும். அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாத காலம் நீடிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் ஞானசார தேரரின் ஊர்வலம் தடுக்கப்படல் வேண்டும். இது தேவையற்றது. நாட்டைச் சீர்குலைக்கவே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தொடர்பாக அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும், பாதுகாப்பு அமைச்சருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் இந்த விடயம் தொடர்பாக மனு கையளிக்க உள்ளோம் - என்றார்.

# மட்டக்களப்பு பொலிஸால் 24 மணிநேர நோயாளர்கள் காவுவண்டி

கொழும்பு, ஜூலை 2

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 8 பொலிஸ் நிலையங்களில் பொதுமக்கள் சேவையாக 24 மணிநேர அவசர நோயாளர் காவுவண்டிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வீதிப் போக்குவரத்து, மின்சாரம், தீ, நீரில் மூழ்குதல், நஞ்சு போன்றவற்றால் ஏற்படக் கூடிய விபத்துச் சம்பவங்களின்போது பொது மக்களுக்கு உதவுவதற்காக இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன் அடிப்படையில் வாகரை, வாழைச்சேனை, கரடியனாறு, ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடி, கொக்கட்டிச்சோலை, வவுணதீவு ஆகிய 8 பொலிஸ் நிலையங்களில் மக்களின் அவசர சேவைக்காக இந்த நோயாளர் காவு வண்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (ம)

# தமிழ்பேசும் மக்களை நாங்கள் ஒருபோதும் பழிவாங்கவில்லை

## ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

பிரபாகரனின் ஆதிக்கத்தின்போது தேரர்களின் உதவியை நாடி நாங்கள் தமிழ் மக்களை பழிவாங்கவில்லை என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ்.

கல்முனை விவகாரம் தொடர்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

மறைந்த முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் பலம் கொண்டவராக இருந்த காலத்திலும் நாங்கள் தமிழர்களை தட்டிக் கழிக்கவில்லை. தமிழ் மக்களுக்கு பல நகரங்கள் இருந்தாலும் முஸ்லிம்களுக்கு உள்ள ஒரே நகரம் கல்முனை மட்டுமே. இந்த நகரில் நாங்கள் பெரும்பான்மையாக வாழ்வதால் இதனை தக்க வைக்க பல வருடங்களாக சிரமத்துடன் போராடுகிறோம் - என்றார். (ம)

# சுகவீன விடுப்புப்போராட்டத்துக்கு அழைத்தது அரச ஆசிரியர் சங்கம்!

கொழும்பு, ஜூலை 2

அரச பாடசாலை அதிபர்களின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட நான்கு கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி எதிர்வரும் 18ஆம் 19ஆம் திகதி சுகவீன விடுமுறைப் போராட்டமொன்றை முன்னெடுக்க அரச ஆசிரியர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது என்று அந்தச் சங்கத்தின் செயலர் ஜெஹான் திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்துக்கு நாடு முழுவதிலுமுள்ள ஆசிரியர்களும், அதிபர்களும் ஆதரவு வழங்க விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்தப் போராட்டத்துக்கு தீர்வு கிட்டவில்லையாயின் பாடசாலை இரண்டாம் தவணைக் காலப் பகுதிக்குள் மிகப்பெரிய தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# சீனர்கள் இரண்டு பேர் நேற்றுமுன்தினம் கைது

கொழும்பு, ஜூலை 2

கடன் அட்டை (கிரடிற் காட்) அச்சிடுவதற்குப் பயன்படுத்தும் இயந்திரத்துடன் இரண்டு சீனர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் தடுப்புப் பணியகத்துக்கு நேற்று முன்தினம் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

இந்த வருடத்தில்

# கல்வியற் கல்லூரிகளுக்கு 8 ஆயிரம் மாணவர்கள்

கொழும்பு, ஜூலை 2

கல்வியியல் கல்லூரிகளுக்கு ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிகச் செயலர் ஆர்.எம்.எம்.ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை தற்போது இடம்பெறுகிறது. இம்முறை கல்வியியல் கல்லூரிகளுக்கு 8 ஆயிரம் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர். ஏனைய வருடங்களிலும் பார்க்க மாணவர்களின் எண்ணிக்கை இம்முறை 2 மடங்காக அதிகரித்துள்ளது.

தற்போது இந்தக் கல்லூரிகளில் 4 ஆயிரத்து 200 பேர் பயிற்சிகளைப் பூர்த்தி செய்துள்ளனர். இவர்கள் பிரதேச செயலக மட்டத்தில் நியமிக்கப்படுவார்கள் - என்றார். (ம)

இதுவரையில் வழங்கப்படாதிருக்கும்

# அரச காணி உரித்துப் பத்திரங்களை உரியவர்களுக்கு வழங்கத் திட்டம்

கொழும்பு, ஜூலை 2

நாடளாவிய ரீதியில் அரச காணிகளில் அனுமதிப் பத்திரங்களுடன் வசிக்கும் மக்களுக்கு காணி உரிமைப் பத்திரத்தை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அது தொடர்பான சட்ட மூலம் ஒன்றைப் நாடாளுமன்றத்தில் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தச் சட்டமூலம் முழு நாட்டுக்கும் உரிய வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1920களில் இருந்து அரச காணிகளில் வசிப்பவர்கள் காணி உரிமை பத்திரமின்றி அனுமதி பத்திரங்களையே வைத்துள்ளனர். இவர்களுக்கு வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளது.

மேற்படி காணிகளைத் தமது பிள்ளைகளுக்கும் பெற்றுக் கொடுக்க முடியாத நிலை உள்ளது. அவ்வாறானவர்களுக்கு காணிகளுக்கான காணி உரிமைப் பத்திரங்களை வழங்குவது இந்தச் சட்டத்தின் நோக்கமாகும். 25 இலட்சம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்வகையில் இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது - என்றார். (ம)

# கோத்தாபாயவுக்கு எதிராக போட்டியிடுவதற்குத் தயார்

## சுதந்திரக் கட்சிக்குள்ளேயே போட்டி

கொழும்பு, ஜூலை 2

கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக அரச தலைவர் தேர்தலில் போட்டியிடத் தயாராக உள்ளேன் என்று தெரிவித்தார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம.



ஊடகமொன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பதுளை மாவட்ட தலைமையிலிருந்து நான் நீக்கப்பட்டுள்ளேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நான் அந்தக் கட்சியின் உறுப்பினராக ஒருபோதும் இருக்கவில்லை. இதனால் இத்தகைய நடவடிக்கை தேவையற்றது. நான் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பெயரளவிலான பதவிகளை விட்டு விலகி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படவுள்ளேன். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீதான அதிருப்தியினால், அப்போது நான் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு ஆதரவளித்தேன். அரச தலைவர் தேர்தலில் தமது வேட்பாளர் யார் என்பதை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி எனக்கு அறிவித்துள்ளது. அரச தலைவர் வேட்பாளராக, கோத்தாபய ராஜபக்ச இல்லாவிடின், மீண்டும் அந்தக் கட்சியை ஆதரிக்கத் தயாராக இருக்கிறேன். ஓகஸ்ட் 11ஆம் நாள் பெயரிடவுள்ள வேட்பாளரை நான் எதிர்க்கிறேன். சுதந்திரக் கட்சியினர் ஆதரவளித்தால் கோத்தாவை எதிர்த்துப் போட்டியிடுவதற்குத் தயாராக உள்ளேன் - என்றார். (ம)

## பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாயவா?



கொழும்பு, ஜூலை 2

அடுத்த அரசதலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாயதான் என்ற ஆருடங்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன. குமார வெல்கம வெளிப்படுத்திய கருத்தை அடுத்தே இந்தக் கருத்துக்கள் வலுத்துள்ளன.

குமார வெல்கம அண்மைக் காலமாக பொதுமக்கள் முன்னணிக்கும், கோத்தபாய ராஜபக்சவுக்கும் எதிராகக் கடும் விமர்சனங்களை வெளிப்படுத்தி வருகின்றார். பொதுமக்கள் முன்னணியில் இருந்து தற்போது விலகியுள்ள அவர், அரச தலைவர் தேர்தலில் தமது வேட்பாளர் யார் என்பதை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி எனக்கு அறிவித்துள்ளது. அரச தலைவர் வேட்பாளராக, கோத்தாபய ராஜபக்ச இல்லாவிடின், மீண்டும் அந்தக் கட்சியை ஆதரிக்கத் தயாராக இருக்கிறேன். ஓகஸ்ட் 11ஆம் நாள் பெயரிடவுள்ள வேட்பாளரை நான் எதிர்க்கிறேன் என்று தெரிவித்திருந்தார். இதையடுத்தே கோத்தபாயவே வேட்பாளர் என்ற கருத்துக் கணிப்புகள் ஓங்கியுள்ளன. (ம)

## டெப் வழங்கும் நடவடிக்கை 3 கட்டங்களாக இடம்பெறும்

### அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 2

அரசின் புதிய கல்வித் திட்டத்துக்கு அமைய உயர் வகுப்பு மாணவர்களுக்கு டெப் கணினி வழங்கும் நட வடிக்கைகள் விரைவில், ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ்காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில்வைத்துநேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையி லேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பாடசாலைகளில் கல்வி கற்கும் உயர் வகுப்பு மாணவர்களுக்கும், அதி லுள்ள ஆசிரியர்களுக்கும் டெப் கணினிகள் ஆரம்ப கட்டமாக வழங்கப்படும். அடுத்த கட்டமாக சகல பாடசாலைகளிலுமுள்ள உயர் வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தரம் 6 முதல் மேல் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு டெப் கணினி வழங்கு வதற்கான நடவடிக்கை களும் மூன்றாம் கட்டமாக ஆரம்பிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## அரச தலைவர் வேட்பாளர் குறித்து பேச்சு நடத்தல் மிகமிக அவசியம்!

### மொட்டு, கை தரப்பினருக்கு மகிந்த அமரவீர அறிவுரை



கொழும்பு, ஜூலை 2

அரச தலைவர் வேட்பாளர் குறித்து சிறிலங்கா பொது மக்கள் முன்னணி மற்றும் சுதந்திர கட்சி ஆகியவற்றுக்கு இடையில் ஏற்பட்டுள்ள சர்ச்சைக்கு பேச்சின் மூலமே தீர்வுகாண முடியும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி மற்றும் சுதந்திர கட்சி ஆகியவற்றின் கூட்டணி குறித்து நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில் கூட்டணியாகச் செயற்படுவது குறித்த கலந்துரையாடல் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இந்த நிலையில் வேட்பாளர் விடயத்தினை பெரிதாக கருதி இரண்டு கட்சிகளும் பிரிந்து செயற்பட்டால் அது ஐக்கிய தேசிய்க் கட்சிக்கு வாய்ப்பாக அமையும். ஆகையால் இரு கட்சி உறுப்பினர்களும் தற்போதைய சூழ்நிலைகளை கருத்திற் கொண்டு சிந்தித்து செயலாற்ற வேண்டும் - என்றார். (ம)



## தீப்பெட்டி தொழிற்சாலை தீ விபத்தால் தீக்கிரையானது

கொழும்பு, ஜூலை 2

கட்டுகஸ்தோட்டை அலதெனிய என்ற இடத்தில் இயங்கி வந்த இரு மாடி தீப்பெட்டித் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் அந்தத் தொழிற்சாலை முற்றாக தீக்கிரையானது.

நேற்றுமுன்தினம் நண்பகல் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# தூக்குத்தண்டனை விதிப்பை கைவிட வேண்டும் மைத்திரி

## பேராசிரியர் திஸ்ஸ வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 2

பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக கூறி பல எதிர்விளைவுகளை தோற்றுவிக்கும் முடிவுகளையே அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னெடுக்கி ன்றார். தூக்குத் தண்டனை விதிக்கும் முயற்சியை அவர் கைவிட வேண்டும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் முன்னெடுக்கப்படும் சாவுத்தண்டனை நிறைவேற்றும் திட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்களுக்கு சாவுத் தண்டனையை வழங்குவதாக அரச தலைவர் அறிவித்ததில் இருந்து மேற்குலக நாட்டினர் கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்துகின்றார்கள். எதிர்ப்புகளை மீறி சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டால் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்ற நிலைப் பாட்டில் பன்னாட்டு அமைப்புக்கள் உள்ளன.



சாவுத் தண்டனையினை தொடர்ந்து முன்னெடுத்து செல்ல மாட்டோம் என்று கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் 120 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. இதில் இலங்கையும் ஒரு நாடாகும். போதைப்பொருள் ஒழிப்பிற்கு சாவுத் தண்டனை ஒருபோதும் தீர்வாக அமையாது. அரசியல்வாதிகளின் ஆதரவுடனேயே நாட்டுக்குள் போதைப் பொருள் ஊடுருவுகின்றது.

நாட்டுக்குள் போதைப்பொருள் எவ்வழியில் வருகின்றது என்பது தொடர்பாக அரச தலைவர் உரிய கவனஞ்செலுத்த வேண்டும். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களைக் கொல்வதால், பிறர் போதைப்பொருளை பாவிக்கமாட்டார்கள் என்ற அரச தலைவரின் வாதத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது' -என்றார். (ம)

## கலஹா பகுதியில் வெடிபொருள் மீட்பு

கொழும்பு, ஜூலை 2

கலஹா பொலிஸ் பிரிவுக்குபட்பட்ட காட்டுப்பகுதியில் ஒரு தொகை வெடிபொருள்கள் பொலிஸ் அதிரடிப்படையினரால் நேற்று மீட்கப்பட்டன. கம்பளை பொலிஸ் அதிரடிப்படையினர் மற்றும் கலஹா பொலிஸ் அதிகாரிகள் ஒன்றிணைந்து நேற்று மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இந்த வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# இரு கட்ட தாக்குதல்களுக்கு ஐ.எஸ். திட்டமிட்டிருந்தது

## பொலிஸ் தரப்புத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதியும் இன்னொரு தற்கொலைத் தாக்குதலை நடத்துவதற்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புத் திட்டமிட்டிருந்தது என்று பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். தொடர் குண்டுத் தாக்குதல் குறித்து சி.ஐ.டி.யினர் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து இது தெரியவந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் முதலில் இணைந்த சிரியாவிலுள்ள கண்டியைச் சேர்ந்த இருவரின் ஆலோசனைக்கமைய இலங்கையில்ஸஹ்ரான்தலைமையில் இந்த இரண்டு கட்ட தற்கொலை தாக்குதல்கள் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தன.

2015ஆம்ஆண்டுதேசியதௌஹீத் ஜமாத் அமைப்பை உருவாக்கி அதனூடாக மதப் பரப்புரைகளை முன்னெடுத்த நிலையில் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி மாநாடு ஒன்றை நடத்திய போது அங்கு சுல்பி முஸ்லீம்களுக்கு இடையில் காத்தான்குடி அலியார் சந்தியில் சண்டையொன்று இடம்பெற்றது. இதன்போது ஸஹ்ரானின் தந்தை உட்பட 11 பேரை பொலிஸார் கைது செய்யப்பட்ட நிலையில் ஸஹ்ரான் தப்பி ஓடியுள்ளார். அவருக்கு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பொலிஸார் தேடிவந்தனர்.

இந்த நிலையில் தப்பி ஓடிய ஸஹ்ரான் மாவனெல்லை பகுதியில் மறைந்திருந்துள்ளார். அதனைத் தொடர்ந்து முகமட் இப்ராஹீம், அப்துல் கரீம் ஆகிய இருவர் தலைமையில் மாவனெல்லை குறூப் என்ற அமைப்பொன்றை உருவாக்கி நடத்தி வந்துள்ளார்.

இதன்போது மாவனெல்லை பகுதியில் புத்தர் சிலை உடைக்கப்பட்டதையடுத்து அங்கு ஏற்பட்ட அசாதாரண நிலைமையினால், முஸ்லிம் இளைஞர்கள் சிலர் மாவனெல்லை குறூப் என்ற அமைப்புடன் சேர்ந்து இயங்கி வந்துள்ளனர்.

அதனடிப்படையில்ஜமாத்மிலாக்கே இப்பிறகாம் (ஜே.எம்.ஐ), தேசிய தவ்ஹீத் ஜமாத் (என்.ரி.ஜே), மாவனெல்லை குறூப் அமைப்பு ஆகிய மூன்று அமைப்புக்களும் ஒன்றிணைந்த நிலையில் அந்த அமைப்புக்களின் தலைவராகவும் இலங்கையிலுள்ளஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவராகவும் ஸஹ்ரான் நியமிக்கப்பட்டார்.

அதன்பின்னர் முதன்முதலாக இலங்கையிலிருந்து சிரியாவுக்கு சென்று ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் சேர்ந்து பயிற்சிபெற்ற கண்டி பெரலகம பிரதேசத்தைச் சேர்ந்த முகமட் முகைதீன் இர்ஷாத் அகமட், முகமட் முஹைதீன் சர்பாத் நிலாம் என்பவர்களுடனான தொடர்பு ஸஹ்ரானுக்கு ஏற்பட்டதுடன் பண உதவிகளும் அங்குள்ள அமைப்புகளூடாக கிடைக்கப்பெற்றுள்ளன.

அதனையடுத்து இலங்கையில் எவ்வாறு தாக்குதல் நடத்துவது என்பது குறித்து சிரியாவிலுள்ள இருவரிடம் ஆலோசனைகளை, 2017ஆம் ஆண்டு ஸஹ்ரான் குழுவினர் பெற்றனர். அந்த அமைப்பின் கொள்கை பரப்புபவர்களாக நௌவ்பர் மௌலவி மற்றும் ஸஹ்ரானின் சகோதரர் செயின் மௌலவி ஆகியோரும், ஆயுதக் குழுவின் தளபதியாக அஹமட் மில்கான், வெடிபொருள் தயாரித்தல் தொழில் நுட்பத்துக்கு கயாத்து கஸ்தான் மற்றும் முகமட் ரில்வான் ஆகியோரும் ஊடகத்துக்கு காத்தான்குடியைச் சேர்ந்த முகமட் பைருஸ் என்பவரும், ஆயுதப் பயிற்சிக்கு ஆமி முகைதீன் என்பவரும் நியமிக்கப்பட்டனர்.

சிரியாவிலுள்ள இருவரின் ஆலோசனையுடன் தாக்குதலுக்கான பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டதையடுத்து முதலில் பயிற்சிக்காக நுவரெலியா அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் வீடுகளை வாடகைக்குஎடுத்து அவை மூளைச் சலவை மற்றும் வாள் பயிற்சியளிக்கும் முகாமாக்கப்பட்ட துடன் வனாத்தைவில்லில் ஆயுத பயிற்சி முகாம் அமைக்கப்பட்டது.

அத்துடன் இவர்களது பாதுகாப்புக்காக நீர்கொழும்பு, பாணந்துறை, மல்வானை, காத்தான்குடி ஒல்லிக்குளம், கொள்ளுப்பிட்டிலக்கிபிளாசா, வனாத்தை வில்லு, கல்கிசை விகாரை வீதி போன்று நாட்டின் பல பகுதிகளிலும் வீடுகளை வாடைகைக்கு எடுத்துள்ளனர்.

இதில் சில இடங்களில் தாக்குதலுக்கான வெடிபொருள்களை மறைத்து வைத்துள்ளனர். மேலும் நுவரெலியா, அம்பாந்தோட்டை பயிற்சி முகாமில் கரத்தான்குடியைச் சேர்ந்த 40 பேர் உட்பட நாட்டில் ஏனைய பகுதியைச் சேர்ந்த சுமார் 120 பேருக்கு மூளைச் சலவை செய்யப்பட்டு அவர்களுக்கு அங்கு வாள் பயிற்சி வழங்கப்பட்டது.

சிரியாவில் இருந்து தாக்குதலுக்கு ஆலோசனை வழங்கி வந்த இருவரில் ஒருவரான முகைதீன் சர்பாத் நிலாம் 2018ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் திகதி அங்கு இடம் பெற்ற விமானத் தாக்குதலில் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து சிரியாவில் இருக்கும் முகமட் முகைதீன் இர்ஷாத் அகமட், வழி நடத்தலில் தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய தாக்குதலுக்கு ஆயுதம் தேவையெனக்கருதி, அவற்றை பெற்றுக்கொள்வதற்கான தாக்குதலுக்கு திட்டமிட்ட நிலையில், இலங்கையில் ஸஹ்ரான் வழிகாட்டலின் கீழ் சவூதியில் வைத்து கைது செய்யப்பட்ட அகமது மில்கான் தலைமையில் ஸஹ்ரானின் சாரதியான ஆதம்லெப்பை கபூர் உட்பட 4 பேர் கொண்ட குழுவினர் மட்டக்களப்பு, வவுணதீவு வலையிறவு பாலத்தில் கடமையில் இருந்த பொலிஸார் மீது கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 29ஆம் திகதி சுட்டும், கத்தியால் குத்தியும் படுகொலைசெய்து அவர்களிடம்இருந்த கைதுப்பாக்கிகளை எடுத்துச் சென்றமை முதல் தாக்குதலாகும்.

அதனைத் தொடர்ந்து தாக்குதலுக்கு இரு திகதிகள் தீர்மானித்திருக்கின்றனர். அதில் உயிர்த்த ஞாயிறு 21ஆம் திகதி, முதலாவது தாக்குதல் ஸஹ்ரான் தலைமையில் திட்டமிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டத் தாக்குதல் மட்டக்களப்பு தேற்றாத்தீவு தேவாலயம், கண்டி தலதா மாளிகை, மட்டு-அம்பாறை மாவட்டத்தில் ஏதாவது ஒரு விகாரை ஆகிய மூன்று இடங்களில் ஸஹ்ரானின் தம்பி றில்வான் தலைமையில் மகேந்திரன் புலஸ்தினி (சாரா), ஸஹ்ரானின் சகோதரரான செயினி மௌலவியின் மனைவியான ஆதம்பாலெப்பை ஆபரித், மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தாக்குதல் மேற்கொண்ட முகமது ஆசாத்தின் மனைவி அப்துல் ரகீம் பைரூசா, ஸஹ்ரானின் மூத்த சகோதரி முகமது காசீம் ஹிதாயா என திட்டமிடப்பட்டது. இந்த இரண்டாம் கட்டத் தாக்குதல் 30ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டது.

இந்த நிலையில் முதலாவது தற்கொலைக் குண்டுத்தாக்குதல் ஸஹ்ரான் தலைமையில் இடம் பெற்ற பின்னர் கல்முனையில் சியாம் தலைமையிலான முபாசித், காலித், சலீம், சப்றாஜ் ஆகிய ஸஹ்ரானின் குழுவொன்று இரண்டாம் கட்டத் தாக்குதலை நடத்த இருக்கின்ற தற்கொலை குண்டுதாரி களின் உறைவிடம் உணவு போன்ற தேவைகளை ஏற்பாடு செய்து தயார் நிலையில் வைத்திருந்துள்ளனர்.

நாட்டில் பல இடங்களில் இருந்த தற்கொலை குண்டுதாரிகள் ஒன்று சேர்ந்து கல்முனை சியாம் அணியினரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிந்தவூர் வீட்டிற்கு வந்தடைந்தனர்.

இதேவேளை, இரண்டாம் கட்டத் தாக்குதலுக்குத் தேவையான வெடிபொருள்கள் சம்மாந்துறை செந்நெல் கிராமத்தில் பாதுகாப்பாக ஏற்கனவே வைக்கப்பட்டிருந்தன. நிந்தவூருக்கு வந்தடைந்த அவர்கள், அங்கிருந்து சாய்ந்தமருதில் ஏற்கனவே வாடகைக்கு எடுத்து விடப்பட்ட வீட்டிற்கு சாய்ந்தமருதில் குண்டு வெடித்த தினத்தன்று வானில் வரும்போது சாராவும் ஸஹ்ரானின் மூத்த சகோதரி ஹிதாயா ஆகியோர் தமது உடல்களில் தற்கொலை வெடிகுண்டை கட்டிக் கொண்டு சென்றுள்ளனர்.

இடையில் பொலிஸார் வாகனத்தை நிறுத்தினால் தற்கொலை குண்டு தாக்குதல் நடத்துவதாக இருந்துள்ளனர். எனினும் வீதி சோதனையில் இந்த வாகனம் அகப்படாதமையினால் சாய்ந்தமருது வீட்டுக்குப் பாதுகாப்பாக வந்தடைந்தனர். பின்னர் குறித்த வீட்டை பொலிஸார் சுற்றிவளைத் ததையடுத்து ஒன்றும் செய்ய முடியாத நிலையில் சாரா மலசலகூடத்தில் வைத்து தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்தியதும், அங்கிருந்த ஸஹ்ரானின் மனைவி மற்றும் குழந்தை ஆகிய இருவரும் உயிர் தப்பிய நிலையில் ஏனைய தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொள்ள இருந்த அனைவரும் உயிரிழந்தனர்.

அக்கரைப்பற்று பாலமுனை களப்பில் இருந்து மீட்கப்பட்ட ஸஹ்ரானின் மடிக் கணனியின் தரவுகள் மற்றும் கைது செய்யப்பட்டவர்களிடம் அரச புலனாய்வு சி.ஐ.டி யினர் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் இவை தெரியவந்துள்ளன' என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# சீன சிகரெட்டுக்களை ஒருபோதும் இறக்குமதி செய்ய அனுமதியேன்

## சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித இவ்வாறு அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 2

போதைப்பொருள் பாவனையினைத் தீவிரப்படுத்தும் விதமாக சீன சிகரெட்டுக்களை இறக்குமதி செய்தால் நான் அரசில் அங்கம் வகிக்கமாட்டேன் என்று தெரிவித்தார் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன.

தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தின் இறுதி நாள் மாநாடு கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் அரச தலைவர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் ஒழிப்புக்கு எதிராக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த அரசில் சுகாதாரத்துறை அமைச்சராக பதவி வகித்த வேளையில் இருந்து உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். புகைத்தல் ஒழிப்பு தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் 22 கொள்கைத் திட்டங்களை வகுத்துள்ளது. இதில் 20 கொள்கைகளை இதுவரையில் முழுமைப்படுத்தியுள்ளோம்.

கடந்த அரசில் போதைப்பொருள் ஒழிப்பிற்கு எதிராக சுகாதார அமைச்சர் முன்னெடுத்து சென்ற புதிய செயற்திட்டங்களுக்கு அரசு எவ்வித ஒத்துழைப்பினையும் வழங்கவில்லை. மாறாக புகைத்தல் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமையவே செயற்பட்டு சுகாதார அமைச்சரை நெருக்கடிக்குள்ளாக்கியது. ஆனால் தற்போது அந்த நிலமை காணப்படவில்லை. புகைத்தல் பாவனையே போதைப் பொருள் பழக்கத்துக்கு ஆரம்ப தளத்தினை இடும். தேசிய வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் விதத்தில் சீன சிகரட்டை இறக்குமதி செய்யும் யோசன்ன நிதியமைச்சரினால் முன்வைக்கப்பட்டது. இலாபத்துக்காக மக்களின் எதிர்காலத்தை இல்லாதொழிக்க முடியாது. சட்டவிரோத்மான முறையில் நாட்டுக்குள் வரும் சிக ரெட்டுக்களை சட்ட ரீதியில் இறக்குமதி செய்வதால் என்ன பாதிப்பு என்பதே நிதியமைச்சரின் வாதமாகும். எதிர்ப்புக்களின் மத்தியில் இரகசியமாக சீன சிகரெட் இறக்குமதி செய்யப்பட்டால் நானும் அரச தலைவரும் அரசில் அங்கம் வகிக்க மாட்டோம் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# சீன சிகரெட்டுகளை அனுமதிக்கக்கூடாது

கொழும்பு, ஜூலை 2

சீன சிகரெட்டுக்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டால் நாம் பதவி விலகுவோம் என்று புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சீன சிகரட் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டால் பதவி விலகுவோம் என்று எச்சரித்து புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் தலைவர் வைத்திய கலாநிதி பாலிய அபேகோன் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இது தொடர்பான கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார். (ம)

# இலங்கை – தாய்லாந்து இடையில் சுற்றுலா தொடர்பில் ஒப்பந்தங்கள்

கொழும்பு, ஜூலை 2

சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் வகையில் இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கும் தாய்லாந்து சுற்று லாத்துறைக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

இலங்கையிலிருந்து தாய்லாந்துக்குச் செல்லும் பௌத்த சுற்றுலா பயணிகளுக்கு அங்குள்ள பௌத்த புனித இடங்களைப் பார்வையிட வசதிகள் செய்து கொடுப்பதற்கும், தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு வரும் பௌத்த சுற்றுலாப் பயணிகளுக்கு இங்குள்ள பௌத்த புனித இடங்களைப் பார்வையிட வசதிகள் செய்து கொடுப்பதும் இந்த ஒப்பந்தத்தில் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளது. (ம)



## அரசியல் கைதிகள் விடுவிப்பை வலியுறுத்தி யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று மதியம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் முதன்மை பேருந்து நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய், பயங்கரவாத தடை சட்டத்தை உடனடியாக தடை செய், சிறைச்சாலை கொலைக் களமா" என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் பொது மக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். (7)

## மணவாளக் கோல அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜூலை 2
யாழ்ப்பாணம் கோட்டை சிறி முனிஸ்வரன் ஆலய மணவாளக் கோல அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 28 நாள்கள் நடைபெறவுள்ளன.
தினமும் மாலை 4 மணிக்கு அபிசேகம் இடம்பெற்று 5.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெறும்.
எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும்,மறுநாள் தீத்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய பூசகரும் பரிபாலகருமான ம.ஞானசேகரம் அறிவித்துள்ளார். (ஐ)

### ஹேமசிறி,...

பெர்னாண்டோ, கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோரைக் கைதுசெய்து, நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு சட்டமா அதிபர் தப்புல டீ. லிவேரா உத்தரவிட்டுள்ளார்.
பதில் பொலிஸ்மா அதிபருக்கே இந்த உத்தரவை சட்டமா அதிபர் நேற்றுப் பிறப்பித்துள்ளார். அதனால் அவர்கள் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-22)

### தூக்குக்கு....

12 அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்தவர்களில் கல்வி அமைச்சின் முன்னாள் செயலர் கலாநிதி தாரா டி மெல்லும் அடங்குகின்றார்.
தூக்குத் தண்டனை நடைமுறைப்படுத்துவது, அரசமைப்பில் நிறுவப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாக இருக்கும் என்று மனுதாரர்கள் வாதிட்டுள்ளனர்.
நான்கு போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றும் ஆணையில் அரச தலைவர் கையெழுத்திட்டதை அடுத்து, தூக்குத் தண்டனையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றில் ஏற்கனவே அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
அந்த மனு மீது நாளை விசாரணை இடம்பெறவுள்ள நிலையில் உயர்நீதிமன்றில் 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (எ-22)

### மாலைதீவு...

களில் அந்நாட்டு அரசியல் பிரதிநிதிகளையும் சந்திப்பார் என்று தெரியவருகின்றது. (எ-22)

### அரச...

முற்றிலும் எதிர்ப்பை தெரிவிக்கும். எந்தவொரு சூழ்நிலையிலும் அரச தலைவர் தேர்தலை தள்ளிவைக்க கூட்டு எதிர்க்கட்சி அனுமதிக்காது - என்றார். (எ)

### ராசிக்கை...

இந்த முறைப் பாட்டை நேற்றுப் பதிவு செய்துள்ளார்.
அப்துல் ராசிக் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்புகளைக் கொண்டவர். இவர் பல கோடி ரூபா நிதியை அரேபிய நாடுகளைச் சேர்ந்தவர்களிடம் இருந்தும், உள்நாட்டிலும் பெற்றுக் கொண்டுள்ளார். ஆனால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அவ்வாறு நிதி பெறவில்லை என்று பொய் கூறியிருக்கின்றார்.
அப்துல் ராசிக்குக்கும் ஸஹ்ரானுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது என்று அந்த முறைப் பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

### போதைப்...

இவ்வாறு இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற தேசிய போதைப்பொருள் ஒழிப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
பன்னாட்டுப் போதைப்பொருள் வலையமைப்புக்கும் பன்னாட்டுப் பயங்கரவாதத்துக்கும் இடையில் தொடர்பு இருக்கின்றது. கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்கும் பன்னாட்டுப் போதைப்பொருள் வலையமைப்புக்கும் சம்பந்தமிருக்கின்றது.
நாட்டையும் மக்களையும் அழிவுக்குள்ளாக்கிவரும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலை ஒழிப்பதற்காக கடந்த நான்கு வருட காலமாக நாம் முன்னெடுத்த பெரும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு கடுகளவேனும் உதவாதவர்கள் இன்று போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராகக் கடுமையாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் என்னைக் குற்றவாளியாக நாட்டுக்குக் காட்டுவதற்கு முயற்சிக்கின்றனர்.
போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ள மூன்று இலட்சம் இளைஞர்களைப் பாதுகாப்பதற்கும் அந்தக் குடும்பங்களைக் கவலையிலிருந்து விடுவிப்பதற்கும் அதிகாரம் இருந்தபோதும், எதிர்க்கட்சியில் இருந்தபோதும் அவர்கள் செய்த பணி என்னவென்றுதான் அவர்கள் அனைவரிடமும் கேட்கின்றேன்.
தேசத்தினதும் எதிர்கால தலைமுறையினதும் நன்மைக்காகவே உயிர் அச்சுறுத்தலையும் கவனத்தில் கொள்ளாது போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்குத் தலைமைத்துவம் வழங்கி வருகின்றேன்.
தேசத்தை அழிவுக்குள்ளாக்கக்கூடிய இலகுவான விடயம் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலாகும். இலங்கை தாய்நாட்டை மற்றுமொரு மெக்சிக்கோவாக மாற்றுவதற்கு இடமளிக்காது போதையிலிருந்து விடுபட்ட நாடு என்ற எண்ணக்கருவை மேம்படுத்துவதற்காக செயற்பட்டு நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கு அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து மக்களும் தமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்.
போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்குவதற்கு எடுத்த தீர்மானம் தொடர்பில் சில பன்னாட்டு அமைப்புக்கள் இன்று இலங்கைக்கு அச்சுறுத்தல் விடுத்து வருகின்றன. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பன்னாட்டு அமைப்புக்களின் உதவி அவசியம் என்றாலும் நாட்டின் அபிவிருத்தியில் தலையிடுவதற்கோ அல்லது அதன் இறைமைக்கு அச்சுறுத்தல் விடுக்கவோ எவருக்கும் உரிமை கிடையாது.
போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் பற்றிய தகவல்கள் இரகசியமானதல்ல. நாட்டைப் பாதுகாப்பதற்கு எத்தனை அரசியல்வாதிகள் தமது பொறுப்பை நிறைவேற்றுகின்றார்கள் என்பது கேள்விக்குரியதாகும். என்றார்.
பேதைப்பொருள் ஒழிப்பு அரச தலைவர் சிறப்புச் செயலணியும் தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையும் இலங்கைப் பொலிஸாரும் இணைந்து தயாரித்துள்ள போதைப்பொருள் பாவனை பரவல் தொடர்பான தேசிய ஆய்வறிக்கை அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது.
மகா சங்கத்தினர் உள்ளிட்ட சமயத் தலைவர்கள், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், முப்படையினர், பொலிஸ் அதிகாரிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சிறைக்கைதிகள், புனர்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்தவர்கள், பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் சாரதிகள், சாரதி உதவியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். (எ-22)

### வரலாறு...

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு ஆயுதங்களை வாங்கிப் போராட்டத்தை நடத்தினர் எனக் குறிப்பிட்டிருந்தார். அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
பிரபாகரன் நடத்திய ஆயுதப் போராட்டத்துக்குத் தமிழ் மக்களின் ஆதரவு இருந்தது. புலம்பெயர் தேசங்களில் இருந்து தமிழர்கள் அதற்குப் பெருமளவான நிதிப் பங்களிப்பைச் செய்திருக்கின்றார்கள். இந்தப்பின்னணியில் வரலாறு தெரியாமல் இப்படி அரச தலைவர் கூறுவது முற்றுமுழுதான தவறு. அதனை நான் கண்டிக்கின்றேன். இது ஒட்டுமொத்த தமிழரின் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தும் ஒரு பொய்த்தகவல். இப்படி ஒரு குற்றச்சாட்டு முன்னெப்போதும் இருந்ததில்லை - என்றார். (எ-22)

### மைத்திரி...

நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறி லங்கா சுதந்திர கட்சி மற்றும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி இணைந்து செயற்படுவது தொடர்பாக பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றிருக்கின்றன. தற்போது காலத்தின் தேவையாக இருப்பது எதிர்வரும் அரச தலைவர் தேர்தலுக்கு தயாராகுவதாகும். அதற்கான தகுதியான வேட்பாளர் ஒருவரை தெரிவுசெய்து அறிவிக்கவேண்டும். ஆனால் அவ்வாறான கலந்துரையாடல்கள் இதுவரை இடம்பெற்றதாகத் தெரியவில்லை.
சிறிலங்கா சுதந்திர கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவே போட்டியிடுவார் என அந்த கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்திருக்கின்றார். இதுபோல் இன்னும் பலர் தெரிவித்து வருகின்றனர். அந்தக் கருத்துக்கள் தொடர்பில் நாங்கள் அலட்டிக்கொள்ளமாட்டோம். என்றார். (எ)

### நயினை....

நடைபெறும் என்று ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

### மைத்திரிபால...

கடத்தல், கொலை என்பவற்றுக்கு நீதிமன்றங்களால் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகின்றது. எனினும் 1976ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவில்லை. தற்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன போதைப் பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று அறிவித்துள்ளார். மிக விரைவில் நால்வருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என்றும் கூறியிருந்தார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் இந்த முடிவுக்குப் பல தரப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. பன்னாட்டு ரீதியிலும் பலத்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. எனினும் தனது முடிவில் எந்த மாற்றம் இல்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறி வருகின்றார். (எ)

### டிசெம்பரில்....

தில் இலங்கையில் மீண்டும் சக்திமிக்க பலமானதொரு அரசு உருவாகும் என்பதை நான் உறுதியுடன் இங்கு கூறிக்கொள்கிறேன். 19 ஆவது திருத்தச் சட்டத்தால் ஒட்டுமொத்த நாடே பலவீனமடைந்துள்ளது. அதைப் பெருமையுடன் கொண்டுவந்து நிறைவேற்றிய அரச தலைவரே இப்போது இல்லாதொழிக்க வேண்டும் என கூறியுள்ளார்.
உண்மையில், இந்த திருத்தத்தால் நாட்டின் நிர்வாகமே ஒட்டுமொத்தமாக சீர்குலைந்துள்ளது. நாட்டின் தலைவருக்கு தீர்மானம் மிக்க முடிவொன்றை எடுக்க முடியாத நிலமை காணப்படுகிறது. இப்படியான பிரச்சினைக்குரிய அரசமைப்பில் தான் நாம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் - என்றார். (எ)

### ஆடம்பர....

நில அளவை மேற்கொள்ளப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஜே/226 கிராம அலுவலர் பிரிவான நகுலேஸ்வரம் பகுதியில் மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்தபோது அரச தலைவர் மாளிகை ஆடம்பரமாக அமைக்கப்பட்டது. அந்த மாளிகை உட்பட 62 ஏக்கர் நிலப்பகுதி கடற்படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. அந்தப் பிரதேசத்தை விடுவிக்க வேண்டும் என்று நீண்டகாலமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. கையகப்படுத்தப்பட்டுள்ள 62 ஏக்கர் நிலப்பரப்பில் 20 ஏக்கர் பகுதியிலேயே அந்த மாளிகை அமைந்துள்ளது. அந்த மாளிகைத் தவிர்த்து ஏனைய நிலப் பகுதியை விடுவிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜாவும் கோரிக்கை விடுத்திருந்தார்.
அங்கு ஆடம்பர மாளிகை அமைக்கப்பட்டுள்ளதைக் காரணம் காட்டி அந்தப் பகுதியை விடுவிப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டு வந்தது. 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், அந்த மாளிகையைச் சுற்றுலாத் திணைக்களத்துக்கு வழங்குவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்திருந்தார்.
இந்தநிலையில் தற்போது அந்த நிலப்பகுதியைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிலத்தின் உரிமையாளர்கள், பிரதேச சபை, பிரதேச செயலகம் என அனைத்துத் தரப்புக்களும் நில அளவை தொடர்பான அறிவித்தல் நில அளவைத் திணைக்களத்தால் அனுப்பப்பட்டுள்ளன. தமது நிலங்கள் விடுவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த நிலத்தின் உரிமையாளர்கள் இந்தத் திடீர் நடவடிக்கையால் ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர்.
அதேவேளை, இந்த விடயம் தொடர்பில் நிலத்தின் உரிமையாளர்கள் இன்று தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர் என்றும் தெரியவருகின்றது. (எ-105)



# இராணுவ ஆட்சிக்கு எதிராக சூடானில் தொடர் போராட்டம்

*7 பேர் சாவு - 181 பேருக்குப் படுகாயம்*

கார்த்தும், ஜூலை 2
சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிராக அந்த நாட்டு மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். மக்களின் போராட்டத்தில் இராணுவம் நிகழ்த்திய வன்முறையில் பலர் சாவடைந்துள்ளதாகவும், காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.




சூடான் சுகாதார அமைச்சகத்தை மேற்கோள்காட்டி அந்த நாட்டின் அரச செய்தி முகமை வெளியிட்ட செய்தியின்படி இந்தப் போராட்டத்தில் 7 பேர் சாவடைந்தனர்.
181 பேர் காயமடைந்தனர். சூடான் தலைநகரில் அச்சத்துடன் வாழ்வதாக அங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

**பின்னணி**
சூடானை 30 ஆண்டுகளாக ஆட்சி செய்த அதிபர் ஓமர் அல்பஷீருக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்தது. இதனால் கடந்த ஏப்ரல் மாதம் அவரைக் கைது செய்து இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இராணுவத் தளபதி தன்னை அதிபராக அறிவித்தார். ஓரிரு நாள்களின் பின்னர் அவரும் பதவி விலகுவதாக அறிவித்தார். மக்களாட்சியை ஏற்படுத்த வலியுறுத்திப் போராட்டங்கள் தொடர்கின்றன.

# ட்ரம்ப் – கிம் சந்திப்பில் இணக்கம் எட்டப்பட்டது

பேச்சு நடத்தப் புதிய குழுவும் தெரிவு



சியோல், ஜூலை 2
வடகொரியா - தென்கொரியா எல்லையில், இராணுவம் விலக்கப்பட்ட பகுதியில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வடகொரிய அதிபர் கிம்மைச் சந்தித்துப் பேசினார். ஒரு வருடத்துக்குள் ட்ரம்ப்பும் கிம்மும் 3ஆவது முறையாகச் சந்திந்துப் பேசிய நிகழ்வு இதுவாகும்.
வடகொரியா அணு ஆயுதப் பயன்பாட்டைக் கைவிடுதல் குறித்து வியட்நாமில் முறிவடைந்த பேச்சுக்கள் இந்தச் சந்திப்பின் மூலமாகத் தொடரும் என நம்பப்பட்டது. ஒரு மணிநேரத்துக்கு மேலாக நடந்த இந்தச் சந்திப்பில் அணுஆயுதப் பயன்பாடு குறித்த பேச்சுக்களை இரு நாடுகளுக்கிடையே தொடங்குவதற்கான குழு ஒன்றை நியமிப்பது தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டதாக்க் கூறப்படுகிறது.
"மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. இந்த இடத்தில் உங்களைப் பார்ப்பேன் என்று நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை" என்று கூறிய கிம்மைப் பார்த்து, "மிக முக்கியமான தருணம் இது... மிகப்பெரிய முன்னேற்றம்" என்று ட்ரம்ப் பதிலளித்ததாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பின்னர், தத்தமது நாடுகளின் தலைநகரங்களுக்கு வருமாறு ஒருவருக்கு ஒருவர் அழைப்பு விடுத்தனர்.
ட்ரம்ப் - கிம் சந்தித்துப் பேசிய குறித்த பிரதேசமானது 4 கிலோ மீற்றர் அகலம், 250 கிலோ மீற்றர் தூரம் வரையான பகுதியாகும். 1953ஆம் ஆண்டு கொரியப் போரின் முடிவுக்குப் பிறகு தென் மற்றும் வடகொரியாவை இந்தப் பகுதி பிரித்து வருகிறது. இராணுவம் விலக்கப்பட்ட பகுதி என்று குறிப்பிடப்பட்டாலும், இதைத் தாண்டியுள்ள பகுதி உலகிலேயே அதிக இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ள எல்லைப் பகுதியாகும்.
இராணுவம் விலக்கப்பட்ட பகுதியின் இருபுறமும் உள்ள கூட்டுப் பாதுகாப்புப் பகுதியில் தான் தென் மற்றும் வடகொரியாவுக்கு இடையேயான பேச்சுக்கள் நடைபெறும். இதுவரை எந்த ஓர் அமெரிக்க அதிபரும் இந்தப் பகுதிக்குள் நுழைந்ததில்லை. 'இந்தப் பூமியில் மிகவும் பயங்கரமான ஓர் இடம்,' என இந்த இடத்தை ஒருமுறை பில் கிளின்டன் குறிப்பிட்டிருந்தார்.

# மத நம்பிக்கை என்பது ஆடைக்கு அப்பாற்பட்டது

நடிகை நஸ்ரத் ஜஹான் தெரிவிப்பு

நான் எதை அணிய வேண்டும் என்று எவரும் தீர்மானிக்க முடியாது. மத நம்பிக்கை என்பது ஆடைக்கு அப்பாற்பட்டது என்று இந்தியாவின் வங்க மாநிலத்தைச் சேர்ந்த நடிகையும், அமைச்சருமான நஸ்ரத் ஜஹான் கூறினார்.
நஸ்ரத் ஜஹான் (வயது 29), நாடாளுமன்றத் தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வென்று அமைச்சர் ஆகியுள்ளார்.
கடந்த மாதம் அவருக்கும், தொழிலதிபர் நிகில் ஜெயின் என்பவருக்கும் திருமணம் நடந்தது. கடந்த 25ஆம் திகதி பதவி ஏற்பதற்காக நஸ்ரத் நாடாளுமன்றத்துக்கு வந்தார். முஸ்லிம் பெண்ணான அவர், நெற்றியில் குங்குமம் வைத்திருந்ததுடன், மாங்கல்யமும் சூடியிருந்தார்.
மேலும், பதவிப் பிரமாண உறுதிமொழியை வாசித்து முடித்தவுடன், 'வந்தே மாதரம்' என்று கூறினார். அவரது செயல் இஸ்லாமுக்கு விரோதமானது என்று ஜாமியா மதகுரு முப்தி ஆசாத் கசாமி தெரிவித்தார். நஸ்ரத் ஜஹானின் செயலுக்கு எதிராக இஸ்லாமிய மத குருக்கள், 'மதக்கட்டளை' பிறப்பித்தனர். அதற்குப் பதிலளிக்கும் விதமாக நஸ்ரத் தனது 'கீச்சகப்' பக்கத்தில், பின்வருமாறு பதிவிட்டார்.
சாதி, இன, மத எல்லைகளைக் கடந்த இந்தியாவின் பிரதிநிதி நான். இப்போதும் முஸ்லிமாகவே இருக்கிறேன். ஆனால், நான் எதை அணிய வேண்டும் என்று யாரும் கருத்துக் கூறக்கூடாது. மதநம்பிக்கை என்பது ஆடைக்கு அப்பாற்பட்டது' என்றார்.

## வெனிசுலா விவகாரம்

# அரசைக் கவிழ்ப்பதற்கு சதி படையினர் 6 பேர் கைது

*கைதானவர்களில் ஒருவர் சாவு*

கராகஸ், ஜூலை 2
வெனிசுலாவில் நடைமுறையிலுள்ளஅதிபர்நிக்கொலஸ்மதுரோ தலைமையிலான அரசைக் கவிழ்ப்பதற்குச்சதிசெய்தகுற்றச்சாட்டின் பேரில் கடந்த புதன் கிழமை, அந்தநாட்டுக்கடற்படை மற்றும்பாதுகாப்புப்படைகளைச் சேர்ந்த 6 பேர் அரசபடைகளால் கைதுசெய்யப்பட்டனர்.
கைதுசெய்யப்பட்டவர்களுள் கடற்படைச்சிப்பாய்ஒருவர்சாவடைந்தார். அகொஸ்ட்டா என்பவரே இவ்வாறு சாவடைந்தார். விசாரணை களுக்காக நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்ட பொழுது, அங்கு சாட்சியளிக்கு முன்னரேஅவர்மயங்கிவிழுந்து சாவடைந்தார். மிகமோசமாகத் துன்புறுத்தப்பட்டதாலேயே அவர்சாவடைந்தார்எனமதுரோவுக்கு எதிராகச் செயற்படுகின்ற அந்த நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர் குவான் குவைடோ தெரிவித்தார்.

**பின்னணி**
வெனிசுலாவில் பொருளாதார நெருக்கடிதலைவிரித்தாடுகிறது. மக்கள்பஞ்சத்திலும், வறுமையிலும் தவிக்கின்றனர். அரசியல் ஸ்திரமற்ற தன்மை நீடிக்கிறது.




வெனிசுலாவின் தற்போதைய அதிபர்மதுரோஅதிபர்தேர்தலில் முறைகேடாகவெற்றிபெற்றார் என்றும் அவர் பதவி விலக வேண்டும் என்றும் அந்த நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர் குவைடோ, மதுரோவுக்குஎதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார். அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் சில குவைடோவுக்கு ஆதரவளிக்கின்றன. மதுரோதனதுநாட்டுப் படைகளின் பலத்துடன், தனது ஆட்சியைத் தக்க வைக்கப் போராடுகிறார். அங்கு உணவு, மருந்துவகைகள், எரிபொருள் எல்லாவற்றுக்கும் பெரும் தட்டுப்பாடுநிலவுகிறது. வெனிசுலாவில் இருந்து, பாதுகாப்பு மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அடங்கலாக 4 மில்லியன் போர் வெனிசுலாவை விட்டு வெளியேறி அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

## அமெரிக்காவில் சோகம்

# வானூர்தி நிலையக் கட்டடத்தில் மோதித் தீப்பிடித்தது வானூர்தி


*10 பேர் சாவு*

வோஷிங்டன், ஜூலை 2
அமெரிக்காவின் ரெக்சாஸ் மாநிலத்தின் டல்லாஸ் நகரிலுள்ள அடிசன் வானூர்தி நிலையத்தில் இருந்து செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பகுதி நோக்கிப் புறப்பட்ட வானூர்தி ஒன்று தனது கட்டுப்பாட்டை இழந்து வானூர்தி நிலையத்தின் கட்டடத்தில் மோதி விபத்துக்குள்ளானது.
விபத்துக்குள்ளான குறித்த வானூர்தி நொருங்கிச் சிதறியதுடன் தீப்பற்றியும் கொண்டது. இதனால் அந்த வானூர்தியில் பயணம் செய்த 10 பேரும் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.
இரட்டை இயந்திரங்களைக் கொண்ட அந்தச் சிறிய ரக வானூர்தி ஓடுதளத்தில் ஓடி மேலே எழும்ப முயன்றபோது, கட்டுப்பாட்டை இழந்து இடதுபுறம் திரும்பியதாலேயே வானூர்தி நிலையக் கட்டடத்துடன் மோதியதாக முதல் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.



# காபூலில் குண்டுத் தாக்குதல் 34 பேர் சாவு - 68 பேர் படுகாயம்

காபூல், ஜூலை 2
ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் நேற்று நடந்த குண்டுத் தாக்குதலில் 34 பேர் சாவடைந்ததாகவும், 68 பேர் காயமடைந்ததாகவும் பன்னாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டன. காபூல் நகரத்தின் உயர் பாதுகாப்பு வளையத்தில் உள்ள புல்இ மகமவுத் கான் பகுதியிலேயே இந்தக் குண்டுத் தாக்குதல் நடந்தது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
புல்இமகமவுத்கான்பகுதியிலுள்ள ஒரு கட்டடத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் துப்பாக்கிச்சண்டை நடந்தது. ஆயுததாரிகள் வெடிபொருள் நிரப்பிய மகிழுந்தை அப்போது வெடிக்கச் செய்தனர். அந்தக் குண்டுவெடிப்பின் பயங்கரச் சத்தம், அதிர்வு என்பன பல கிலோமீற்றர் தொலைவு வரைக் கேட்கும் அளவுக்குப் பெரியளவிலான தாக்குதலாக அது அமைந்தது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த ஆயுத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஆப்கானிஸ்தானில் சமாதானப் பேச்சுக்களை விவாதிக்க அமெரிக்கப் பிரதிநிதிகள் மற்றும் தலிபான் தூதுக்குழு இடையே 7ஆவது சுற்று கூட்டம் நடந்து வரும் வேளையில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜெயலலிதா இறப்பு விவகாரம்

## விசாரணை ஆணையகத்துக்கு தடை நீடிப்பு

புதுடெல்லி, ஜூலை 2
தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் சாவு குறித்து விசாரணை நடத்திவருகின்ற ஆறுமுகசாமி விசாரணை ஆணையகத்துக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை மேலும் 4 வாரம் நீட்டித்து இந்திய உயர்நீதிமன்று உத்தரவிட்டது. ஜெயலலிதாவின் சாவு தொடர்பாக விசாரிப்பதற்காக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் விசாரணை ஆணையகத்தைத் தமிழக அரசு நியமித்தது. இந்த ஆணையகம் ஜெயலலிதாவுக்குச் சிகிச்சை அளித்த மருத்துவர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரையும் அழைத்து விசாரித்தது. ஆறுமுகசாமி ஆணையகத்தின் விசாரணைக்குத் தடை கேட்டு அப்பலோ மருத்துவமனை சார்பில் மேல்முறையீட்டு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.
அந்த மனுவில், "பல்வேறு தகவல்களை மருத்துவர்கள் விசாரணை ஆணையகத்திடம் அளித்த பிறகும் மீண்டும், மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்படுகிறார்கள்" என்று கூறப்பட்டு இருந்தது. இது குறித்து தமிழக அரசை பதில் அளிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. அதுவரை விசாரணை நடத்துவதற்கு ஆறுமுகசாமி விசாரணை ஆணையகத்துக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டு இருந்தது. தற்போது அந்தத் தடையையே மேலும் 4 வாரம் நீட்டித்துள்ளது உயர்நீதிமன்று.




## கடும் மழை காரணமாக நீரில் மூழ்கியது மும்பை

புதுடெல்லி, ஜூலை 2
இந்தியாவின் மேற்கு மாநிலமான மும்பையில் தென்மேற்குப் பருவமழை பெய்துவருகின்றது. இந்த நிலையில், அங்கு நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் கொட்டித் தீர்த்த பலத்த மழை காரணமாக அங்குள்ள தாழ்வான பகுதிகளும், வீடுகளும் நீரில் மூழ்கின. மும்பையில் 24 மணிநேரத்தில் 19 சென்றிமீற்றர் மழையும், குஜராத் மாநிலம் நவசாரியில் 12 மணிநேரத்தில் 21 சென்றி மீற்றர் மழையும் கொட்டித்தீர்த்துள்ளது. மும்பையில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மழைநீர் காட்டாற்று வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடுகிறது. வாகனங்கள் வெள்ளநீரில் தத்தளித்தபடி செல்கின்றன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்துள்ளது. மும்பைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் உள்ள பகுதிகளில் கூடுதல் மழை பெய்துள்ளது. ஏரிகளில் வெறும் 5 சதவீதமே தண்ணீரே இருப்பில் உள்ள நிலையில், இந்த மழையால் ஏரிகளில் தண்ணீர் இருப்பு அதிகரித்து வருகிறது. இதே நேரம் இந்தியாவின் தென்மாநிலமான தமிழகத்தில் வறட்சியும், தண்ணீர்த் தட்டுப்பாடும் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழகத் தண்ணீர்த் தட்டுப்பாடு விவகாரம்

## நிலத்தடி நீர் சுரண்டல் அதிகரிப்பு புள்ளிவிவரத்தில் அதிர்ச்சித் தகவல்

புதுடெல்லி, ஜூலை 2
இந்தியா முழுவதும் நிலத்தடி நீரை வெளியே எடுக்கின்ற அளவு அதிகரித்திருப்பதாகப் புள்ளிவிவரத்தை மேற்கொள்காட்டிக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலத்தடிநீர் தொடர்பாக இந்திய நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு அரசு சார்பில் பதிலளிக்கும்போதே இணை அமைச்சர் ரத்தன் லால் கத்தாரியா இந்தத் தகவலை வெளிப்படுத்தினார். இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:
நாட்டின் பல பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் கணிசமாகக் குறைந்துள்ளது. நிலத்தடிநீரை அதிகமாக உறிஞ்சுவது, சுத்தமான நீரின் தேவை அதிகரித்திருப்பது, பருவ மழையில் மாற்றங்கள், மக்கள் தொகைப் பெருக்கம், தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் நகரமயமாக்கல் போன்ற காரணங்களால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது. நாட்டில் 52 சதவீத கிணறுகள் கண்காணிக்கப்பட்டு வந்ததில், அவற்றில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளமை தெரியவந்துள்ளது. நாடு முழுவதும் நிலத்தடி நீர் மட்டம் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது.
அதில், அளவுக்கதிகமாக நிலத்தடி நீர் சுரண்டப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது என்றார். அத்தோடு தமிழகத்தைப் பொறுத்த வரையில் வட்டார அளவில் அதிகபட்சமாக 358 பகுதிகளில் நிலத்தடி நீர் அளவுக்கதிகமாக உறிஞ்சப்பட்டுள்ளது - என்று தெரிவித்தார்.
தமிழகத்தில் நீர்த் தட்டுப்பாடு அதிகரித்து, நீருக்காக மக்கள் தொடர்ந்து அல்லல்பட்டு வருகின்ற சமயத்தில் இந்தக் கருத்தை அவர் வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.





## இன்றைய நாள்

**மேடம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபார வளர்ச்சிக்கு சில மாற்றங்களை பற்றுவது நல்லது. பெண்கள் நகை இரவல் கொடுக்க வேண்டாம். வெகு நாள் பிரச்னை சுமுக தீர்வு பெறும்.

**இடபம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். புதிய வழிகளில் பணச்செலவு அதிகரிக்கும். பயன்தராத பொருளை வாங்க வேண்டாம்.

**மிதுனம்:** நிகழ்வுகள் உங்கள் எதிர்பார்ப்பிற்கு மாறாக இருக்கலாம். தொழில், வியாபாரத்தில் கடுமையான உழைப்பால் மட்டுமே எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**கடகம்:** விலகிச் சென்ற உறவினர், விரும்பி சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து புதிய பரிமாணம் உருவாகும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சிகர சூழ்நிலை இருக்கும்.

**சிம்மம்:** உங்கள் மனதில் உருவான திட்டம், செயல் வடிவம் பெறும். தொழில், வியாபார நடைமுறை சிறந்து உற்பத்தி, விற்பனையை அதிகரிக்கும். தாராள பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள்.

**கன்னி:** சுற்றுப்புற சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**துலாம்:** எதிர்வரும் பணிகளுக்கு முன்னேற்பாடு செய்வது அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி தொந்தரவு தரலாம். அளவான பணவரவு கிடைக்கும். போக்குவரத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழித்து ஆதாய பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும்.

**தனுசு:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். கருணை மனதுடன் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** பணிகள் தாமதமாவதால் மனதில் சஞ்சலம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தன்மையை பாதுகாப்பது நல்லது. அளவான பணவரவு உண்டு.

**கும்பம்:** மாறுபட்ட சூழல் மனதில் அதிருப்தி உருவாக்கலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவை. வரவை விட செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** வழக்கத்திற்கு மாறான பணி உருவாகி தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். நிலுவைப்பணம் கூடுதல் முயற்சியால் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.




# சென்றலைட்ஸ் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை2

ஞானம்ஸ் பெயின்ற், யாழ்ப்பாணம் மாவட்டத் துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திய விஜயரெட்ணம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான புற்தரை ஆடுகளத்தில் நடைபெற்ற ரி -20 துடுப்பாட்டத் தொடரில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மதியம் 1 மணிக்கு இடம் பெற்ற இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி 19.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களை பெற்றது.இதில் யனுதாஸ் 28 ஓட்டங்களையும், துசியந்தன் 23 ஓட்டங்களையும், ஜெயறூபன் 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜெரிக்துசாந் 5 இலக்குகளை கைப்பற்றி அசத்தினார். அத்தோடு விதுஷன் 3 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 3 இலக்குகளை இழந்தது வெற்றி இலக்கை எட்டிப் பிடித்தது. அணி சார்பில் ஜெனோசன் 37 ஓட்டங்களையும், ஜெரிக்துசாந் 23 ஓட்டங்களையும், செல்ரன் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சாம்பவன், பிரதீஸ், நிருசிகன் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

முதன்மை விருந்தினராக பேராசிரியர் எம். நடராஜா சுந்தரம், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் ஆர்.கபிலன், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை எ.பி. திருமகன், யாழ்ப்பாண மாவட்டத் துடுப்பாட்டச் சங்கத் தலைவர் ஏ.எஸ் நிசாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (23)

# சக்திவேல், சென்.மேரிஸ் இறுதிக்கு முன்னேறின

யாழ்ப்பாணம், ஜூலை 2

மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மறைந்த வீர, வீராங்கனைகள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கழக மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற முதலாவதாக இடம் பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியான் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்று பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. ஆட்டநாயகனாக கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக அணி வீரர் துஜீவ் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி ஆட்டநேர முடிவில் 8:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. ஆட்டநாயகனாக நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் பிலிப் தெரிவானார். (23)



தேசிய கூடைப்பந்தாட்டத் தொடரில்

# யாழ். மாவட்ட பெண்கள் அணி கிண்ணத்தை சுவீகரித்தது

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 31 ஆவது தேசிய கூடைப்பந்தாட்ட தொடரில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட பெண்கள் அணி கிண்ணம் வென்றது.

குருநாகல் திருக்குடும்ப கன்னியர்மட கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட பெண்கள் அணியை எதிர்த்து கொழும்பு நகர்புற இளைஞர்கழக அணியின் பெண்கள் அணி மோதியது.

இதில் யாழ்ப்பாண மாவட்ட பெண்கள் அணி 65:48 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது (23)



வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி



கிளிநொச்சி மகா வித்தியாலய அணி

# யாழ். இந்து, யாழ். மத்தி மேசைப்பந்தில் சம்பியன்

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் 3:2 என்ற செற் கணக்கில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. 3:1 என்ற செற் கணக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது. இதில் 3:1 என்ற செற் கணக்கில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)



யாழ். இந்துக் கல்லூரி



யாழ். மத்திய கல்லூரி

மேசைப்பந்தாட்டத்தில்

# வேம்படி, கிளி.ம.வி. கிண்ணம் வென்றன

யாழ்ப்பாணம், ஜூலை 2

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான மேசைப்பந்தாட்டத் தொடரில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் 3:0 என்ற செற் கணக்கில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி வெற்றி பெற்றது.

17 வயதுப்பிரிவு பெண்களுக்கான மேசைப்பந்தாட்டத் தொடரில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து கிளிநொச்சி மகா வித்தியலய அணி மோதிக் கொண்டது. இதில் 3:0 என்ற செற் கணக்கில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது. (23)



உடற்பயிற்சிப் போட்டியில்

# புனித அந்தோனியர் கல்லூரி மாகாணச் சம்பியனானது

கரணவாய், ஜூலை 2

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் மாகாணச் சம்பியனாகியது ஊர்காவற்றுறை புனித அந்தோனியர் கல்லூரி ஆண்கள் அணி.




இந்தப் போட்டி ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் 20 வயது ஆண்களுக்கான போட்டியில் முதலாவது இடத்தை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் .இரண்டாமிடத்தை இளவாலை யங் ஹென்றியரசர் கல்லூரியும், மூன்றாமிடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியும் பெற்றன. (108)

ரோகித்தின் சதம் வீண்:

# இந்தியாவுக்கு முதல் தோல்வி



இங்கிலாந்து அணி இந்த வெற்றியின் மூலம் தனது அரையிறுதி வாய்ப்பை இறுகப் பிடித்துள்ளது. அத்தோடு பாகிஸ்தான் அணியின் அரையிறுதி வாய்ப்பையும் கேள்விக் குறியாக்கியுள்ளது. இங்கிலாந்த அணி புள்ளிகள் அடிப்படையில் 10 புள்ளிகளுடன் 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து அணி 31 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இங்கிலாந்து அணியின் ஆரம்ப இணை அணிக்கு நல்லதொரு இணைப் பாட்டத்தை வழங்கினர். இந்திய பந்து வீச்சாளர்கள் மாறி மாறி பந்துகளை வீசியும் இருவரின் இலக்குகளை கைப்பறுவதில் பெரும் சிரமப்பட்டனர். இறுதியில் குல்தீப் ஜாதவின் பந்து வீச்சில்தான் முதல் இலக்கு சரிக்கப்பட்டது. அணி 160 ஓட்டங்களை எட்டியிருந்தது. அணித் தலைவர் மோர்கன் ஏமாற்றியிருந்தார். ஏனைய வீரர்கள் தங்களுடைய பொறுப்புணர்ந்து ஆடினர். பின்னர் ஒரு சீரான இடைவெளியில் 4 இலக்குகள் இழக்கப்பட இங்கிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. ஆரம்பத்திலிருந்த ஓட்டங்களைப் பார்த்த போது அணி 400 ஓட்டங்களைத் தாண்டும் என்ற நிலை காணப்பட்டது. பின்னர் இணைந்த ஸ்ரோக்ஸ், வோக்ஸ் இணை அதிரடி காட்ட ஆரம்பித்தனர். இறுதியில் இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 337 ஓட்டங்களைக் குவித்தது. பந்து வீச்சில் முகமட் சமி சிறப்பாக பந்து வீசி 5 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார்.

பதிலுக்கு தனது புதிய ஜெர்சியுடன் களமிறங்கிய இந்திய அணி நிதானமாக ஆட ஆரம்பிக்க எத்தனித்த போது ராகுல் எந்தவொரு ஓட்டத்தையும் பெறாது ஆட்டமிழந்தார். மறுமுனையில் சர்மா அதிரடி காட்ட ஆரம்பித்தார். ராகுல் ஆட்டமிழப்பதற்கு முன்னர் ரோகித் சர்மாவின் பிடியொன்றை இங்கிலாந்து அணி தவறவிட்டிருந்தமையால் அவர் சதம் கடந்தார். வழமையைப் போன்று சதம் கடந்தவுடன் அவர் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். இங்கிலாந்து அணியின் களத்தடுப்பாளர்கள் சிறந்த முறையில் களத்தடுப்பு பணியில் ஈடுபட்டனர். ஒவ்வொரு பிடியெடுப்புக்களும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் பிடியெடுப்புக்களை மேற்கொண்டு ஆட்டமிழப்புக்களை ஏற்படுத்தினார்கள். இங்கிலாந்தின் பந்த வீச்சாளர்களும் தங்கள் கைகளில் போட்டியின் முடிவை இறுதி வரை வைத்திருந்தனர். சிறந்த போட்டி முடிப்பாளர் என்று அழைக்கப்படும் டோனி களத்தில் இறுதி வரை இருந்தும் இந்திய அணியால் வெற்றி பெற முடியவில்லை. அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 31 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இந்திய அணியின் இந்தத் தோல்வியின் மூலம் இலங்கை அணியின் அரையிறுதி வாய்ப்பு பறிக்கப்பட்டது. அத்துடன் பாகிஸ்தான் அணியின் அரையிறுதி வாய்ப்பும் கேள்விக்குறியாகியுள்ளது.



# தீவுகளை கதறவிட்ட இலங்கை சிங்கங்கள்



இலங்கை அணியின் பொறுப்பான ஆட்டத்தால் பெரும் இலக்கை நிர்ணயித்து ஆறுதல் வெற்றி பெற்றது.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் - இலங்கை அணிகள் மோதின. இதில் இலங்கை அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் இலங்கை அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிதானமாகவும் பொறுப்பாகவும் ஆடினர். எல்லா வீரர்களும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இதில் அவிஸ்க பெர்னாண்டோ அபாரமாக துடுப்பெடுத்தாடி சதம் கடந்தார். அவர் இந்தப் போட்டியில் பொறுப்புடன் ஆடியிருந்ததைக் காண முடிந்தது. மறுமுனையில் குசல் பெரேராவும் அதிரடியாக ஆடி தேவையற்ற ரன் அவுட் மூலம் ஆட்டமிழந்தார். மேற்கிந்திய பந்து வீச்சாளர்கள் ஒவ்வொரு இணையையும் பிரிப்பதற்கு சிரமப்பட்டனர். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 338 ஓட்டங்களைக் குவித்தது. இந்த உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

பதிலுக்குக் களமிறங்கிய தீவுகளுக்கு இலங்கையின் பந்து வீச்சாளர்கள் அடுத்தடுத்து அதிர்ச்சியை கொடுத்தனர். எதிர்பார்த்த வீரர்கள் எவரும் சிறப்பிக்கவில்லை. மத்திய தர வரிசை வீரர் போரன் இலங்கை அணிக்கு இறுதி வரை பயமுறுத்திக் கொண்டு களத்தில் தனியொருவராகப் போராடிய வண்ணம் இருந்தார். அவருடன் அலெய்ன் இணைந்து இலங்கை அணியின் இலக்கை விரட்ட அதிரடி காட்டினர்.

அப்பொழுது அலெய்ன் அரைச் சதம் கடந்து ரன் அவுட் மூலம் ஆட்டமிழக்க பின்னர் போரனும் சதம் கடந்து மத்தியூசின் பந்தில் ஆட்டமிழக்க இலங்கையின் பக்கம் வெற்றி திரும்பியது. அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 23 ஓட்டங்களால் வெற்றியைத் த்வற விட்டது. மலிங்க அபாரமாகபந்து வீசி 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக இலங்கை அணி வீரர் அவிஸ்க பெர்ணான்டோ தெரிவுசெய்யப்பட்டார்.




## விஜய் சங்கர் விலகல்

இந்திய அணியின் சகல துறை ஆட்டக்காரர் தமிழக வீரர் விஜய் சங்கர், காலில் ஏற்பட்ட காயம் காரணமாக உலகக் கிண்ணத் தொடரிலிருந்து விலகுவதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்தில் நடைபெறும் உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணிக்கு அரையிறுதி வாய்ப்பு பிரகாசமாக காணப்படும் நிலையில் அந்த அணியின் சகல துறை ஆட்டக்காரர் தமிழக வீரர் விஜய் சங்கர் உலகக் கிண்ண தொடர் அணியில் இருந்து விலகுகின்றார். காலில் ஏற்பட்ட காயம் குணமடையாததால் அவர் இந்திய அணியில் இருந்து விலகுகின்றார். அவருக்கு பதிலாக மயங்க் அகர்வால் இணைக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

முதல் இரண்டுபோட்டிகளில் இடம்பெறாத இவர் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இடம்பிடித்து இரண்டு இலக்குகளை கைப்பற்றி அசத்தியிருந்தார்.

## மீண்டும் நீல நிற ஜெர்சியே வேண்டும் – நடிகை ஹுமா குரேஷி



இந்திய கிரிக்கெட் அணியின் ஜெர்சி மீண்டும் நீல நிற ஜெர்சியே வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார் நடிகை ஹுமா குரேஷி.

நடப்பு உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்றது வருகின்றது. நேற்றுமுனதினம் இடம்பெற்ற போட்டியில் இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே இடம்பெற்றது. இதில் இந்திய அணி காவி நிற ஜெர்சியை அணிந்து களமிறங்கியது. முதன்முதலாக இந்திய அணி காவி நிற ஜெர்சியுடன் களமிறங்கி அந்தப் போட்டியில் தோல்வியும் அடைந்தது. இதற்குப் பல்வேறு தரப்பிடம் இருந்து விமர்சனங்களும் எழுந்துள்ளன. இந்த நிலையில், 'காலா' படத்தில் நடித்த நடிகையான ஹுமா குரேஷி, மீண்டும் நீல நிற ஜெர்சியே வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். இது மூடநம்பிக்கையெல்லாம் இல்லை. ஆனால், தயவுசெய்து மீண்டும் நீல நிற ஜெர்சியே வேண்டும்- என்றார்.

**Guest House க்கு வீடு தேவை**

Guest House நடத்துவதற்கு உகந்த நல்ல சூழலில் வீடு யாழ். நகரில் இருந்து 5 KM இற்கு உட்பட்டதாக அவசரமாக தேவை

தொடர்புக்கு:
076 050 3863, 0779 459 445

**EnXone Technologies looking for php developers for our team.**

**Requirements**

- minimum HNDIT qualified candidates.
- php, html5, css,javascript, jquery - intermediate level.
- Experience with larvel is an added advantage
- photoshop familiarity,

Send your resume to info@enxonetech.com

More info +021 221 7158

(CS 26399)(4.17)

**Techno World**

**A/L2019**

பழைய, புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கான

**விசேட செயலமர்வு**

ஆரம்பம் காலை 09.00 மணிமுதல் மதியம் 2 மணிவரை

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 12,13,14 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 15,16 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 19,20,21 | I.C.T, விவசாயம், புவியியல், ஊடகக் கல்வி, இலகு கணிதம், சித்திரம் |

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்

தொடர்புகளுக்கு: 0770175346, 0771703549

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.



# சமிக்கு சச்சின் பாராட்டு

நடப்பு உலகக் கிண்ணத் தில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்க ளில் ஒருவரான முகமது ஷமிக்கு, புவனேஷ்வர் குமார் காயத்தால் அவ திப்பட்டு ஓய்வளிக்கப்பட் டதால் இறுதி மூன்று போட்டிகளில் விளையா டும் வாய்ப்புக் கிடைத் தது.

தனக்கு கிடைத்த வாய்ப்பை சரியாக பயன் படுத்தி ஆப்கானிஸ்தா னுக்கு எதிராக நான்கு இலக்குகளையும், மேற் கிந்தியத்தீவுகளுக்கு எதி ரான நான்கு இலக்குக ளையும், இங்கிலாந் துக்கு எதிராக ஐந்து இலக் குகளையும் கைப்பற்றி னார். அவர் சந்தித்த மூன்று போட்டிகளிலும் 13 இலக்குகளைச் சாய்த் துள்ளார்.

இது குறித்து சச்சின் தெரி விக்கையில்;

கடந்த மூன்று போட்டிக ளில் முகமது ஷமியின் பந்து வீச்சை பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது. வரும் போட்டிகளில் அவ ருக்கு அதிர்ஷ்டம் கைக் கொடுக்கும் - என்றார்.



கோபா கால்பந்தாட்டப் போட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெரு, உருகுவே அணிகளுக்கிடையிலான காலிறுதியில் உருகுவே நாட்டு ரசிகர்கள் அந்த அணிக்கு உற்சாகமூட்டிய போது.

# கிரிக்கெட் வீரர் ராகுலுக்கு நடிகையுடன் காதலா!!



நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் விளையாடி வரும் கே.எல். ராகுலும், பொலிவூட் நடிகர் சுனில் ஷெட்டியின் மகளும், நடிகையுமான அதியா ஷெட் டியும் காதலிப்பதாக தகவல்கள் வெளி யாகி உள்ளன.

இந்திய கிரிக்கெட் வீரர்களில் அசாரு தீன், விராட்கோக்லி ஆகியோர் சினிமா நடிகைகளை காதலித்து திருமணம் செய்துகொண்டனர். இந்த வரிசையில் கிரிக்கெட் வீரர் ராகுலும் இந்தி நடி கையை காதலித்து வருகிறார்.

இது குறித்து ராகுல் மற்றும் அதியாவின் நண்பர்கள் தெரிவிக்கையில்;

ராகுலும், அதியாவும் ஒன்றாக ஊர் சுற்றுகி றார்கள். அவர்கள் டேட்டிங், காதல் என சுற்றுகிறார்கள். இவர்கள் நண்பர்கள் மூலம் அறிமுகமா னார்கள். நட்பாக தொடங்கி பின்னர் காதலாகி இருக்கிறது. பொது இடங்களுக்கு ஜோடியாக சென்றால் காதல் என்று கிசுகிசு கி ளம் பு வ து தை தவிர்க்க பொது இடங் களில் சுற்றுவதை தவிர்க்கிறார்கள்.

முன்னதாக ராகுலும் நடிகை நிதி அகர்வா லும் காதலிப்பதாக பேசப்பட்டது. இது குறித்து நிதி அவர்வா லிடம் கேட்டதற்கு, நாங்கள் நல்ல நண் பர் மட்டுமே -என் றார். இந்த நிலையில் ராகுலின் பெயர் அதி யாவுடன் அடிபடுகி றது.

**மரண அறிவித்தல்**



தோற்றம் 31 . 01 . 1934

மறைவு 01 . 07 . 2019

**சண்முகநாதன் பூரணம்**

திருநெல்வேலி கிழக்கு, பூதவராயர் வீதியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் பூரணம் 01.07.2019 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகநாதன் (நடனமுருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், நெல்லியடி, முத்திரைச்சந்தி) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிங்கராசா மற்றும் குலவீரசிங்கம், தர்மராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராமநாதன், தேவகுருநாதன் ஆகியோரின் மைத்துனியும் தங்கலட்சுமி, காலஞ்சென்ற கமலபூசணி மற்றும் தருமரத்தினம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் வைத்தியநாதன், பரமேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, கேதீஸ்வரி, காலஞ்சென்ற யோகநாதன், மற்றும் அருட்செல்வநாதன், மாணிக்கேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுபத்திரா, யோகேஸ்வரன், ஆனந்தகுமார், கேசவன், சுஜாதா ஆகியோரின் பாசமிகு மாமியும் விசாகன், காலஞ்சென்ற கீர்த்தனா மற்றும் மயூரன், காலஞ்சென்ற செந்தூரன் மற்றும் காயத்திரி, விதூஷன், வாகீசன், ஆதித்தன், ஆத்மன், ஹரிஹர்ஷன், மனஷ்வினி, அபிஷேக், சாஜித்யன், சுபகீர்த்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கிருஷ்ணராமின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23/2, அரசவீதி, நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்.

077 595 6631 / 076 647 7653
077 030 9159 / 076 610 3665

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்:3203 | திகதி: 2019.07.01 | திங்கட்கிழமை | நீலம்

SATURDAY FORTUNE

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 11 | 49 | 58 | 68 | S
போனஸ் இலக்கம்: 02
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்: 49,463,525/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழைப்பு
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 656
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.07.01
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 65,785,850/-

வெற்றி இலக்கங்கள்: 45 47 65 67 D

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழைப்பு
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 1582
சீட்டிழுப்பு திகதி: 01.07.2019

வெற்றி இலக்கங்கள்: 19 21 23 52 S

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.33,387,580/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
செம்மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 04.07.2019 திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.